"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்" தாபிதம்: 1876

# சத்தியவேத பாதுகாவலன்

தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

மலர் 87 | யாழ்ப்பாணம் 1962-ம் ஆ. ஆவணிமீ 5-ம்வ ஞாயிற்றுக்கிழமை — பிரதிசதம் 10 | இதழ் 31

சகலவித
அச்சு வேலைகளுக்கும்
எம்மோடு
கலந்தாலோசியுங்கள்.

அர்ச் சூசைமாமுனிவர் அச்சகம்,
பிரதான வீதி, — யாழ்ப்பாணம்.

# வடமத்தியமாகாணத்தை உன்னத நிலைக்கு உயர்த்தியது என்ன?

## "அனுரதபுரம் அர்ச். சூசையப்பர் கல்லூரியே" என்கிறார் அப்பட்டினப் பாராளுமன்றப்பிரதிநிதி திரு. கே. பி. ரட்னுயக்க

அனுராதபுரம், அர்ச். சூசையப்பர் கல்லூரி தனது விளையாட்டுப்போட்டியை, இதுவரையில் என்றுமே நிகழ்த்தியிராதவகையில், காண்போர் வியக்கத்தக்க விதத்தில், பார்ப்போர் உள்ளம் பரவசமடையும்முறையில் ஆடி 21-ந்திகதி பிற்பகல் வெகுசிறப்பாகக் கொண்டாடியது. போட்டிவிழா புதிய கல்லூரியை உருவாக்குவதற்காக அரசாங்கத்தினரால் ஒதுக்கப்பட்ட மைதானத்திலே நடைபெற்றது.

அவ்விழாவை, அனுரதபுரப் பாராளுமன்ற அங்கத்தவரும், அத்தினப் பிரதம விருந்தாளருமான திரு. K. B. ரட்னுயக்கா அவர்கள் "ஒலிம்பிக்" தீப்பந்தத்தைப்பற்றவைத்தும், யாழ்ப்பாண மேற்றிராணியார் அனுப்பியவாழ்த்துச் செய்தியை வாசித்தும், ஆரம்பித்து வைத்தார். ஏற்கனவே அம்மைதானத்தின் நான்கு மூலைகளில், பாடசாலையிலுள்ள நான்கு இல்லங்களின் விடுதிகள் நிறுவப்பட்டிருந்தன. விளையாட்டுப்போட்டி மும்முரமாக நடைபெற்றபின் பரிசளிப்பென்னும் இறுதிக்கட்டத்தை அடைந்ததும், பாடசாலை அதிபர், பிரதம விருந்தாளரைச் சொற்பொழிவாற்றுமாறு வேண்டினார். பிரதம விருந்தாளர் தமது சொற்பொழிவில்:

"வடமத்திய மாகாணத்தை இவ்வுன்னத நிலைக்குக்கொண்டுவந்தது அர்ச். சூசையப்பர் கல்லூரி யென்றால் அது மிகையாகாது' என்றார். மேலும் தொடர்ந்து பேசுகையில் "குறுகிய காலத்தில் அயராத உழைப்பினால் கானகமாகக் காணப்பட்ட இவ்விடத்தை மைதானமாக்கி இன்று இவ் விளையாட்டுப் போட்டியை வைத்ததினாலே இக்கல்லூரியின் சரித்திரஏட்டிலே முதன்முதலாகப் பொன்னால் பொறிக்கப்பட வேண்டியது எமது இக்கல்லூரி அதிபர் வண. ஞானப்பிரகாசம் குரவர் அவர்களின் நாமமே" என்றும் குறிப்பிட்டார்.

இதன்பின் வெற்றிபெற்ற விளையாட்டு வீரர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. ஈற்றில், கல்லூரியின் பழையமாணவர்களின் காரியதரிசி திரு. ஆபிரகாம் பங்கிராஸ் அவர்கள் நன்றியுரை கூறினார்.

## சங்கத்திற்கு லுத்தரன், யூதசபைப் பிரதிநிதிகள்

வத்திக்கான் சங்கத்திற்கு உத்தியோகபூர்வமான அவதானி ஒருவரை அனுப்ப ஜேர்மானிய லுத்தரன்சபை நிச்சயித்திருக்கிறது. சங்கஆயத்த முயற்சிகளை அவதானிக்க லுத்தரன் சபையினர் ஒருவர் ஏற்கனவே றோமையிலிருக்கிறார்.

உலகயூத மகாசங்கம் தனது அவதானியாக அறிஞர் சைம் உவார்டியை நியமனஞ்செய்திருக்கிறது. இவர் இஸ்ராயேல் அரசாங்கத்தில் கிறிஸ்துவ விவகார ஆலோசகராயிருக்கிறார்.

உவாட் மெதடிஸ்ற் சபைத் தலைவர் சங்கத்திற்கு அழைப்பை ஏற்றிருக்கிறார்.

## கோலாலம்பூர் மேற்றிராணியார்



யாழ்ப்பாணத் தமிழ்ப்பெருமகனும், மலாய்நாட்டிலே கோலாலம்பூர் மேற்றிராணியாருமான மகா வந். டொமினிக் வேந்தர்கோன் ஆண்டகைஅவர்கள் கப்பல்மார்க்கமாக உரோமாபுரிக்குச் செல்லும்வழியிலே கொழும்பில் இறங்கிச் சென்றதிங்கட்கிழமை யாழ்ப்பாணம்வந்து சேர்ந்து தமது இனசனரையும், மற்றும் பலரையும் சந்தித்துப் பல்வேறிடங்களைத் தரிசித்தபின் சென்ற வியாழக்கிழமை மறுபடியும் கொழும்புக்குப் பயணமாயினார்.

## நிகழ்ச்சிநிரல் சென்றுகொண்டிருக்கிறது

119 சிறுஏட்டுத் தொகுதியாய், 2,000 பக்கங்களடங்கிய இரண்டாம் வத்திக்கான்சங்க நிகழ்ச்சிநிரல் "திட்ட"ப்பிரதிஒன்று உலகத்தின் ஒவ்வொரு கத்தோலிக்க மேற்றிராணிமாருக்கும் அனுப்பியாயிற்று. இதில்மத்திய ஆயத்தக்குழுவின் 12பகுதிகளும் ஆராய்ந்தவை அடங்கும். இவை யாவும அரங்கேற்றப்படமாட்டாது ஐப்பசியில் அனைத்துலக மேற்றிராணிமார் றோமைக்குப் பயணமாகவிருப்பதால் தற்பொழுது ஞானவிசாரணை அலுவல்களில் அதிதீவிரமாயீடுபட்டிருக்கிறார்கள். எனினும் சங்க நிகழ்ச்சிநிரலை ஆராய்வாகப் படிப்பார்கள்.

மேற்றிராணிமாரினதும் அவர்களது உதவிமேற்றிராணிமாரினதும் செலவின்போது விக்கார் ஜெனறல்மார் மேற்றிராசனப் பொறுப்பாளராயிருப்பர்.

சங்கநிகழ்ச்சிநிரல் 1000 அறிஞர் சேர்ந்து, 20,000 மணித்தியாலச் செலவில் செய்யப்பட்டதாகையால் இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு நிறைவான ஆயத்தம் நடந்திருக்கிறதென்பது தெளிவு.

## ஸ்ராலின்நாட்டில் மதம்வளர்கின்றது

ஸ்ராலினுடைய சொந்தநாடாகிய ஜோர்ஜியர்வில் மதஅனுட்டானங்கள் பரவிவருகின்றன என அப்பிரதேசப் பத்திரிகை கூறுகிறது. அரசாங்கம் நாஸ்திக பிரசாரத்தை ஊக்கமாய் நடாத்தியபோதிலும் அது போதியதாயில்லை.

கிறிஸ்துவ திருவிழாக்களான உத்தானம், கிறிஸ்மஸ், பெந்தெக்கோஸ்தும், இஸ்லாமிய ஒருசா நோன்பும் அனுட்டிக்கப்பட்டுவருகின்றன. செக் கிராமத்தில் 1000-க்கு மேற்பட்டவர்களால் ஒருசா நோன்பு அனுசரிக்கப்பட்டதன்றி அதற்காக 147 ஆடுகளும் பலியாக அடிக்கப்பட்டன.

சில மாகாணங்களில் விவாகங்கள் தேவாலயங்களில் நடப்பதுமன்றி ஞானஸ்நானமும், பிரேத அடக்கச் சடங்குகளும் நடந்தேறுகின்றன.

பொதுவுடைமை இலட்சியங்கள் மதக்கோட்பாடுகளுக்கு முரண் அல்லவெனவும், விஞ்ஞான ஆராய்ச்சி மதானுசாரத்துடன் சார்ந்திருக்கலாமெனவும் மந்திரிமார் புதுப்பிரசாரஞ் செய்கின்றனர்.

## இயந்திரமூலம் கணக்கிடப்படும்

தற்காலத்தில் பல கொம்பனிகள் விலைப்பட்டியல் எழுதும் இயந்திரமுறை, வத்திக்கான் சங்கத்தில் வாக்குக் கணக்கெடுக்க உபயோகப்படும். வாக்கெடுப்புக்குமுன் வாக்குச்சீட்டுகள் விநியோகிக்கப்படும். ஒவ்வொரு சீட்டிலும் பெயர், தானம் "சம்மதம்" "சம்மதமில்லை" என்பன குறிப்பிட இடமிருக்கும்.

குலத்துவ மாணவரான 17 பேர் இவ்வாக்குச்சீட்டுகளைச் சேர்ப்பர். வாக்குச்சீட்டுகள் எல்லாம் சேர்க்கவும், வகைப்படுத்தி முடிவு அறிவிக்கவும் 20 நிமிடங்கள் பிடிக்கும்.

சங்கப் பிதாக்கள் ஒவ்வொருவரையும் குறிப்பிட இலக்கமுண்டு. அவர்களுக்குவேண்டியவசதிகளும் இடைவேளைச் சிற்றுண்டி, காப்பிமுதலியனவும் சம்பேதுரு பேராலயத்தில் இடமுண்டு.

## பாப்புவின் நிருபத்தை ஸ்பானிய அரசாங்கம் பின்பற்றும்

அருளப்பபாப்பு விடுத்த "அன்னையும் ஆசிரியையும்," எனும் சமூகவியல் நிருபக்கூற்றுகளுக்கிணங்க ஸ்பானிய அரசாங்கம் தனது சமூகவிருத்தித்திட்டத்தை அமைக்கும் எனக் கூறுகிறது. பொதுமக்களின் அபிப்பிராயம் வரவேற்கப்படும் எனத் தளபதி பிறங்கோவின் மந்திரி சபை கூறியிருக்கின்றது.

ஸ்பானிய அரசாங்க சர்வகலாசாலைகள் போன்று அங்குள்ள கத்தோலிக்க பல்கலைக்கழகங்களும் பட்டமளிக்கும் உரிமை கொடுக்கும் ஒப்பந்தமொன்று பரிசுத்த ஸ்தானத்துடன் செய்திருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார், சதாசகாயமாதாவின் 300-வது நவநாள்

அருள் நிறை அன்னையும், கருணையின் கன்னியும், அன்பின் ஊற்றுமான சதாசகாயத்தாயின் 300-வது நவநாள் மன்னார் அர்ச். செபஸ்தியார் ஆலயத்தில் இம்மாதம் 18-ந் திகதி அதிவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

இதற்கு இருதினங்களின் முன்னர் விசேட மாலை ஆராதனைகள் நடாத்தப்பட்டன. கொண்டாட்டதினத்தன்று காலை மூன்று குருவர்களால் பெரிய பாடற்பூசை நிறைவேற்றப்பட்டது.

கோயில் முற்றவெளி பன்னிறத் துவசங்களாலும் மின்சார வெளிச்சங்களாலும் வெகு அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. மாலை 4-30 மணியளவில் ஒலிபெருக்கியும், பாண்டுவாத்தியமும் மாதாவின் புகழை இனிய கீர்த்தனைகளால் ஒலித்துக்கொண்டிருந்தன.

கோயிலினுள் திரளாகக் கூடிநின்ற பக்தர்கள்கூட்டம் செபமாலையும், பிரார்த்தனையும் ஓதித் தம்வணக்கத்தை மாதாவுக்குத் தெரிவித்தனர். மாலை 5மணியளவில் சுற்றுப்பிரகாரம் ஆரம்பமானது. பாடசாலை மாணவ, மாணவிகளும், பெண்களும், ஆண்களும், சங்கியாச, கன்னியாஸ்திரிமார்களும், அணியணியாக முற்றவெளியை நோக்கிச் சென்றனர். பூசைப் பரிசாரகர்கள் மாதாவின் பிரதிமையை அலங்கரிக்கப்பட்ட கொலுவில்வைத்து ஏந்திச் சென்றனர். சாரணர்கள் பிரதிமையின் இருமருங்கும் அணிவகுத்து நடந்தனர். பக்தர்கள் கூட்டத்தின் பக்திப்பிரவாகமான பவனி பார்க்க அழகாக இருந்தது.

அன்னையின் பிரதிமை முற்றவெளியில் அமைக்கப்பட்டிருந்த அலங்கார பீடத்தில் வைக்கப்பட்டது. கோயிலின் முகப்பில் அமைந்துள்ள மேல் மாடியில் நற்கருணை ஆசீர்வாதத்துக்கான பீடமொன்று அலங்கரிக்கப்பட்டிருந்தது. இதனருகிலிருந்து வண. கட்டளைக்குருவர் ஜி. ரி. பாலசுந்தரமவர்கள் சதாசகாயமாதாவின் வழக்கமான புதன்கிழமை ஆராதனையை ஒலிபெருக்கிமூலம் தொடக்கி நடத்தினார். இச்சந்தர்ப்பத்தில் முன்னூறு நவநாட்களினதும் நன்றித்துதி, விண்ணப்பத்திரட்டு என்பன வாசிக்கப்பட்டன. இவற்றின் எண்ணிக்கை ஏறக்குறைய ஒரு இலட்சம்வரையில் இருந்தது. இத்துணை உபகார சகாயங்களையும் ஈந்த மாதா அன்பால் சனத்திரள் ஆனந்தக்கண்ணீருகுத்தி அன்னையின் புகழை ஆகாயமட்டுமெழ ஆர்ப்பரித்துப் பாடினர்.

வணக்கத்துக்குரிய சேவியர் சுவாமியாரவர்களால் "தாயன்பு" என்னும் விஷயம்பற்றி இதயங்கனியும் இன்னுரை ஆற்றப்பட்டது.

கடைசியாக விசேடபீடத்தின்மீது எழுந்தேற்றஞ்செய்யப்பட்ட சற்பிரசாதநாதரின் ஆசீர்வாதம் மக்கள்கூட்டத்துக்கு அருளப்பட்டது. இவ் விசேட ஆராதனைக்கு உதவிய பக்தர்களுக்குக் கட்டளைக்குருவரால் நன்றி தெரிவிக்கப்பட்டது. மாலை 7-30 மணியளவில் கொண்டாட்டம் நிறைவெய்திற்று.

— நிருபர்

## நுவரெலியாவில் அர்ச். வின்சென்ற் டி போல் திருநாள்

இம்மதி 22-ந் தேதி ஏழைகளின் பாதுகாவலராம் அர்ச். வின்சென் டி போல் திருநாள் வெகுவிமரிசையாக இங்கு கொண்டாடப்பட்டது. வின்சென்ற்டி போல்சபையினரால் 17-7-62 செவ்வாய்க்கிழமை முதல் ஞானவொடுக்கமும் ஒழுங்குசெய்யப்பட்டது. திருச்சிறுப்பள்ளியைச்சேர்ந்த **வண. எஸ். ஆரோக்கியநாதர் சுவாமி**யவர்கள் ஞானவொடுக்கப்போதகஞ் செய்தார். தினமும் மாலை 5-30 மணிக்கு செபமாலை, பிரசங்கம், தேவ நற்கருணை ஆசீர்வாதமும் இடம்பெற்றன. நுவரெலியா விசாரணைப்பங்கைச் சேர்ந்த கத்தோலிக்கர் பெருமளவு ஞானவொடுக்கத்தில் பங்குகொண்டனர்.

திருநாளன்று 22-7-62 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00மணிக்கு பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது. அன்றுமாலை, செண் வின்சென்ற்டிபோல் சபையாரின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. மாலை ஆசீர்வாதத்தின்பின் கிறிஸ்துநாதரின் சீவியவரலாறுபற்றிய திரைப்படக்காட்சியும் நடைபெற்றது.

21-ந் தேதி சனிக்கிழமை அர்ச். வின்சென் டி போல் சபையினரால், வறியவர்களுக்குத் தருமங்கொடுக்கப்பட்டது. வின்சென்ற்டி போல் சபையினர், கட்டளைக்குருவர் ஊடாக ஆயத்தஞ்செய்த ஞானவொடுக்கம் அநேகருக்கு ஞானஒளியையும், புதுவாழ்வையும அளிக்க உதவிசெய்தது என்றே கூறவேண்டும்.

—நிருபர்

## மட்டக்களப்பு அர்ச். வின்சென்ற் டி போல் தருமசபையின் பொதுக்கூட்டம்

மட்டக்களப்புப் பகுதியைச்சேர்ந்த தாண்டவன்வெளி, புளியந்தீவு, புளியடிக்குடாச் சபைகளின் பொதுக் கூட்டம், தாண்டவன்வெளி கிளெனி பாடசாலை மண்டபத்தில் கடந்த ஞாயிறு 22-7-62 பிற்பகல் 5 மணிக்கு மாவட்டசபைத்தலைவர் திரு கே. ஐ. செல்லத்துரை அவர்கள் தலைமையில் செபத்துடன் ஆரம்பமானது. காரியதரிசியின் கூட்ட அறிக்கைகள் வாசிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றது. தொடர்ந்து மூன்று சபைகளினதும் கணக்கறிக்கைகள் வாசிக்கப்பட்டு மாவட்டசபைத் தனாதிகாரர் திரு எஸ். தவராசா அவர்களால் ஏற்கப்பட்டு, காணிக்கையும் சேர்க்கப்பட்டது. தாண்டவன்வெளிச் சபையில் புதிதாய்ச் சேர்ந்த இரு சகோதரர்களை தலைவர் அறிமுகப்படுத்திவைத்தார்.

புளியடிக்குடாச் சபைத்தலைவர் திரு பீ. எம். யோசப் அவர்களால் "நாம் பாவிகளாகிய ஏழைகள்மட்டில் தான் அதிக பிரயாசை எடுக்கவேண்டும். பாவியைத் தள்ளாது அவன் மேல்தான் மேலும் இரக்கங்கொண்டு உதவிசெய்து அவனைத் திருத்த முயலவேண்டும்" என்னும் விடயம்பற்றி விரிவாகவும் தெளிவாகவும் பேசப்பட்டது. தொடர்ந்து திரு எம். கமிலஸ் அவர்களால் சபையில் உள்ள வாலிப அங்கத்தினருக்குச் சில புத்திமதிகள் சொல்லப்பட்டது.

ஈற்றில் இப்பொதுக்கூட்டத்துக்குச் சமுகமாய்இருந்த தாண்டவன்வெளிச் சபை ஞானப்பிதா வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்[illegible] அவர்களால் அன்றையத்தின [illegible]ளாகிய யேசுநாதர்கூறிய "நான் இவர்கள்மேல் இரக்கமாயிருக்கிறேன்" என்னும் வார்த்தைகளை உதாரணமாகக் காட்டி நாம்செய்யும்சேவையில் பிரதானம் ஏழைகள்மட்டில் இரக்கம், இரக்கமில்லாது கடமைக்குச்செய்யும் சேவை ஆண்டவருக்கு உவப்பானதல்ல என விளக்கிப்பேசித் திருக்கா ஆசீரும் அளித்தார். தலைவர் நன்றியுரையுடனும், முடிவுச்செபத்தோடும், தாண்டவன்வெளிச் சபை அங்கத்தினரின் விருந்துபசாரத்தோடும் கூட்டம் கலைவுற்றது.

— நிருபர்

### எனது ஆபிரிக்கயாத்திரை—7

# உலகின் உன்னத சேமக்காலை

— வண. பிரான்சிஸ் ரிப்ளே அடிகளார்

ஜெனோவாவின் துறையைநோக்கி மெல்லமெல்ல நகர்ந்துகொண்டிருந்தது கென்யாகோட்டை. அதன் ஊதுகுழற் சப்தம் சூழவுள்ள குன்றுகளில்மோதி எதிரொலித்துக்கொண்டிருந்தது. எம்மைச்சுற்றிப் பலதேசங்களினதும் நாவாய்கள் காணப்பட்டன. பலவர்ணங்கள்பொருந்திய அவ்வத்தேசங்களின் கொடிகள் கப்பல்களினுச்சியில் அசைந்தாடியது ஓர் சிறந்தகாட்சியாக விருந்தது ஒருபுறத்தில் எரியெண்ணெய்க் களஞ்சியங்கள். மறுபுறத்தில் யுத்த காலத்தில் பகைவரின் குண்டுகளினால் சிதைக்கப்பட்ட பாரியகட்டிடங்கள்.

மாலையுணவருந்தியபின்னர் பிரயாணிகளிலொருவருடன் ரெயில்வேநிலையத்துக்குச் சென்றேன். மிலான்நகர் சென்று ஓவியநிபுணர் லெயோனார்டாவிஞ்சியின் சிறப்புமிக்க இறுதி விருந்து என்ற சித்திரத்தைக் கண்டு களிப்பது அவரது முதற்திட்டம். இத்தாலிய ரெயில்நிலையங்கள் பிரித்தானியாவிலுள்ளவைதவிடச் சிறந்தவை என்பது எனது அபிப்பிராயம். பிரித்தானியாவில பலநிலையங்களிலும் பதிவுகாரியாலயங்களும், அலுவலகங்களும் அந்நிலையங்கள் முதலில் ஆரம்பிக்கப்பட்டபோதிருந்த நிலையிலேயே காணப்படுகின்றன. வரவேற்புப்பகுதிகள் வசதியற்றவை. இளைப்பாறுமிடங்கள் இருளடைந்து காணப்படும். சிற்றுண்டிச்சாலைகளும் பிரயாணிகளின் அதிருப்திக்குள்ளானவையே.

இத்தாலியில் யான்கண்டகாட்சிகள் மாறுபட்டவை. ஒவ்வொருநிலையங்களும் நவீன அமைப்புடன் காட்சியளித்தன. நாம்சென்ற நிலையத்தின் அலுவலகம் நவீன தபால்நிலையங்களிலுள்ளதுபோல அமைந்திருக்கிறது. நீண்ட எழுத்துப்பீடங்களினருகே லிகிதர்கள் வரிசையாகஅமர்ந்து பிரயாணிகளின் தேவைகளைப் பூர்த்திசெய்கின்றனர். இளைப்பாறுமிடங்கள் காற்றுவசதியுடன் பிரகாசமாகக் காட்சியளித்தன. சிற்றுண்டிச்சாலையும் சுவர்ச்சிமிக்கது. பிரயாணிகளின்தேவைகள் உடனுக்குடன் பூர்த்திசெய்யப்படுகின்றன. நிலையம்முழுவதும் புனிதமாகக்காணப்பட்டது. அதிகாரிகள் நிலையத்தில் அங்குமிங்குமாக உலாவிக்கொண்டு பிரயாணிகட்குவேண்டிய உதவியளிக்கும்முறை மெச்சத்தக்கது.

யான்மீண்டும் கப்பலுக்குச்சென்ற பின்னர் ஓர் அதிசயத்தை உணர்ந்தேன். மாசிமாதம் 17-ந்தேதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபின்னர் இன்றுதான் முதல்தடவையாக நீண்டதூரம் நடக்கக்கூடியதாயிற்று.

**29 சித்திரை, 1960.**

இக்கப்பலின் மருத்துவர் யான்நீண்டதூரம் நடந்துசென்றதுபற்றிக் கடிந்துகொண்டார். எனவே, அவரின் ஆலோசனைக்கிணங்க இன்றைய சுற்றுலாவை வாகனத்தினுதவியுடன் நடாத்தினேன். உல்லாசப்பிரயாணிகட்கென அமர்த்தப்பட்ட பெரியமோட்டார் வண்டியில் யானும் பிரயாணத்தை ஆரம்பித்தேன்.

முதலில் பிரசித்திபெற்ற ஜெனோவாவின் பொதுச்சேமக்காலைக்குச் சென்றோம். உலகிலேயே மிகச்சிறந்தது என்ற கௌரவமும் இக்காலைக்குண்டு. இங்குள்ள இரண்டாயிரத்துக்கு மதிகமான நினைவுச்சின்னங்களை மதிப்பிடமுடியாத மிகவிலையேறப்பெற்ற சேமக்காலைஎனவும் குறிப்பிடலாம். ஆதிகால சின்னங்களுடன் போட்டியிட்ட வண்ணம் நவீன சிற்பவேலைப்பாடுகளும் காட்சிதருகின்றன. 1844-ம் ஆண்டுதொடக்கம் இற்றைவரை சிற்ப, கட்டிடக்கலைகளின் வளர்ச்சியை இச்சேமக்காலையில் நன்கு அவதானிக்க முடியும். அண்மையில் அமைக்கப்படும் நினைவுச்சின்னங்களில் சலவைக்கல்லில் இறந்தவரின் உருவச்சித்திரங்களையும் அமைத்திருக்கிறார்கள்.

காலையைச்சூழ நறுமணம் வீசும் மலர்களையுடைய முட்செடிகளையும், புதர்களையும் அடர்த்தியாக அமைத்துள்ளார்கள். கத்தோலிக்கருக்கு மட்டுமன்றிப் புரொட்டஸ்தாந்தர்கட்கும், யூதர்கட்கும் காலையில் சிலபகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. மத்தியில் நம்பிக்கையினடையாளமான சலவைக் கல்லோவியம் மிகஉயரமாக அமைக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத்தைச் செதுக்கியவர் சாந்தோவார்னிஎன்ற சிற்பி.

அங்கமைந்துள்ள சிற்றாலயம் அலங்காரவேலைப்பாடுகள் பொலிந்தவண்ணம் காட்சிதருகிறது. ஆறு தூண்வரிசைகள் அலயத்தைத் தாங்குகின்றன. ஆலயம் சிறிதாகவும், விசுவாசிகள்தொகை மிக அதிகமாகவும் இருப்பதால் ஞாயிற்றுக்கிழமைகளில் மும்முறைகள் பூசை சொல்லப்படுகிறதாம்.

இக்காலையின் நினைவுச்சின்னங்களில் என்னைக்கவர்ந்தது மரித்தோருக்காக வேண்டுதல்செய்யும் பாவனையிலமைந்துள்ள குருவொருவரின் உயிரோவியமே. அதைச் செதுக்கியவர் ரோட்டா என்பவர். குருவின்தாடி, இடைக்கச்சு, அதிலுள்ள முடிச்சுகள், செபமாலை, கரங்கள் முதலியனவும், வதனமும் தத்ரூபமாகக் காட்சியளித்தன. சலவைக்கல்லில இவ்விதநுட்பமாகச் செதுக்கியெடுப்பதில் இத்தாலிய சிற்பிகள் மிகவல்லுநர்கள்.

(வளரும்)

### நன்றித்துதி

பரி. சதாசகாயமாதாவினதும் அர்ச். டோமினிக் சாவியோவினதும் மன்றாட்டினால் நான் கேட்டகாரியம் கிடைக்கப்பெற்றேன். அவர்களுடைய நாமம் என்றும் புகழப்படுவதாக.

ஓர் அடியாள்.

### நன்றித்துதி

யேசுவின் திரு இருதயத்தின் இரக்கத்தாலும், இடைவிடா சகாய மாதாவின் சலுகையாலும், அர்ச். யூதாததேயு, அர்ச். சவேரியார், அர்ச். அந்தோனியார் இவர்களின் வேண்டுதலாலும் உத்தரிக்கிற ஆத்துமாக்களின் மன்றாட்டாலும் நான் பரீட்சையில் சித்தியடைந்ததற்கு நன்றி செலுத்துகிறேன். இன்னும் எனக்குத் தேவஅழைத்தல் கிடைக்கும்படியாகவும், நான்கேட்கும் மன்றாட்டுகள் கிடைக்கும்படியாகவும் வேண்டுகிறேன். இவர்களின் நாமம் எங்கும் புகழப்படுவதாக. பிரசுர தாமதத்திற்கு மன்னிப்புக் கோருகிறேன்.

ஒரு பக்தர்.

துர்மாதிரிகை ஒரு முட்டையைப் போன்றது; அது பொரித்தவுடன் அதற்குச் சிறகுகள் வந்துவிடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

### புதியஅசைஸ் கமிஷனர்

திரு. வி. சிவசுப்பிரமணியம்அவர்கள் சென்றதிங்கட்கிழமைமுதல் அசைஸ் கமிஷனராக நியமனஞ்செய்யப் பெற்று அன்றுமுதல் மேல்பகுதிச் சுப்பிறீங்கோட்டில் விசாரணைநடத்தத் தொடங்கியிருக்கின்றார்.

### கடலட்டை ஏற்றுமதி

கடலட்டைகளைச் சிங்கப்பூருக்கு ஏற்றுமதிசெய்து நடத்தும்வியாபாரத்தையாழ்ப்பாணக்கூட்டுறவுமீன்பிடிசங்கம திரும்பவும்விரைவிலே ஆரம்பிக்கவிருக்கிறது. கடலட்டைகளைச் சிங்கப்பூருக்கு ஏற்றுமதிசெய்வதானது மாறுபட்ட சிலநிபந்தனைகள் மூகாந்திரமாக 1959-ம்ஆண்டு தடைப்படுத்தப் பட்டிருந்தது முன்சொன்ன சங்கம இந்தவியாபாரத்தைத் தற்போது புதுப்பித்திருக்கிறது.

### சுவீப்பரிசுக்கு வரியில்லை

சுவிப்புகளிலும், லொத்தர்களிலும் பெற்றுக்கொள்ளும் பரிசுகளுக்குத் தற்பொழுது விதிக்கப்படும் வருமான வரி இனிமேல் கைவிடப்படுமென்று நிதிமந்திரி தெரிவித்திருக்கின்றார். இதனால்உண்டாகும் வருமானக் குறைவை லொத்தர்வரியைக் கூட்டுவதின்மூலம் நிவிர்த்திசெய்ய உத்தேசிக்கப் பட்டிருக்கிறது.

### அரசாங்கம் கொடுத்தகடன்

ஆரம்பத்திலே ஆயிரம்பஸ்களை வாங்குவதற்கும், வேலைத்தலகட்டடங்கள், கராஜ்கள், டெப்போக்களை அமைப்பதற்கும், அத்தியாவசிய உபகரணங்கள் வாங்குவதற்குமாக இலங்கைப்போக்குவரத்துச்சபைக்கு 1957-ம்ஆண்டுமுதல் அரசாங்கம் கடனுக்கக்கொடுத்தபணம் 9கோடியே 80இலட்சம்ரூபாவாகும். அடுத்தநிதி வருடத்தில் போக்குவரத்துச் சபையின் செலவுகளுக்கு 1கோடியே 78 இலட்சத்து 55ஆயிரம்ரூபா தேவைப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

### சம்பளஉயர்வு இல்லை

வடபகுதியிலே அரசாங்கம் எடுத்துக்கொண்ட பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கும் சென்றஆடிமாதத்திலிருந்து சம்பளஉயர்வு நிறுத்தப்பட்டிருக்கிறது. சிங்களத்தில் தேர்ச்சி பெறாததே இவர்களின்சம்பளஉயர்வு நிறுத்தப்படக்காரணமாகும். இதனால் ஆசிரியர்களிடையே பெரும்அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது.

### காப்பிக்கொட்டைவிலை

கடந்தசிலதினங்களாகக் காப்பிக் கொட்டையின்விலை இருமடங்காக அதிகரித்துள்ளது. அதனால் அதற்குப் பெரும்தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. அதன்இறக்குமதி தடைசெய்யப்பட்டமையே இந்தத்தட்டுப்பாட்டிற்குக் காரணமாகும்.

### தேர்தல்ஆட்சேப மனுக்கள்

சமீபத்தில் நடைபெற்ற இடைத்தேர்தலிலே அனுராதபுரத்தொகுதிஸ்தானத்திற்கு அரசாங்க கட்சியைச் சேர்ந்த திரு. கிறிபண்டா இரத்நாயக்கா தெரிவுசெய்யப்பட்டதை ஆட்சேபித்துத் திரு. வன்னிஹாமிகே அப்புஹாமிஎன்பவர் சுப்பிறீங்கோட்டுக்குத் தேர்தல்ஆட்சேப மனுவொன்று சமர்ப்பித்திருக்கிறார். வெலிமடைஸ்தானத்திற்குத் திரு. கே. எம். பி. இராஜரத்னா தெரிவுசெய்யப்பட்டதை ஆட்சேபித்துத் திரு. விஜேதாச சேரசிங்கஎன்பவர் மற்றோர்தேர்தல் ஆட்சேபமனுவைச் சுப்பிறீங்கோட்டுக்குச் சமர்ப்பித்திருக்கின்றார்.

### புதியகுருவரின் வருகை

இற்றைக்கு ஓராண்டின்முன் உரோமாபுரியிலே குருப்பட்டம்பெற்றவரும், யாழ்நகர் ஆஸ்பத்திரிவீதியில் வசிப்பவரான திரு. பி. சீ. பொன்னையா அவர்களின் இரண்டாவதுபுதல்வருமான வண. லூயிஸ் பொன்னையா, O. M. I. சுவாமியவர்கள் இம்மாதம் 8-ந்திகதியன்று கொழும்புவந்து சேர்ந்து, மறுநாள் 9-ந்திகதிவியாழக்கிழமைகாலை 7-30மணிக்குத் தமது விசாரணைப்பங்குக்கோவிலாகிய யாழ்ப்பாணம், சுண்டிக்குளி, அர்ச். ஸ்நாபக யுவானியார் ஆலயத்தில் முதன்முறையாகத் திவ்வியபூசை நிறைவேற்றுவார். பின்னர் காலை10மணிக்கு அவர் தந்தையார்இல்லத்திலும், பிற்பகல்4-30 மணிக்கு விசாரணைப்பங்குக் கிறீஸ்தவர்களால் கோவில்மைதானத்திலும் பகிரங்கவரவேற்புகள் நடத்தப்படுமென அறிகின்றோம்.

### அரைக்கொத்து அரிசிவெட்டு

அரைக்கொத்து அரிசியைக் குறைத்து வாரம்ஒன்றுக்கு ஒன்றரைக் கொத்துவழங்கும் புதியஅரிசிப்பங்கீட்டுமுறை நிகழும்ஆவணிமாதம் 13-ந்திகதி திங்கட்கிழமை முதல் நடைமுறைக்குவருமென்று உணவு-வர்த்தக அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி தெரிவித்திருக்கின்றார்.

### இரண்டு கொத்திலிருந்து ஒன்றரை

கூப்பன் ஒன்றுக்குத் தற்பொழுது வழங்கப்படும் பங்கீட்டரிசி இரண்டு கொத்திலிருந்து ஒன்றரைக்கொத்தாய்க் குறைக்கப்பட்டிருப்பதாகச் சென்றவியாழக்கிழமை வரவு-செலவுத்திட்ட உரையின்போது நிதிமந்திரி அறிவிக்கலாயினர். இதையிட்டு எதிர்க்கட்சியினர் மாத்திரமல்ல, அரசாங்ககட்சியினருமே கண்டனக்குரல் எழுப்பியிருக்கின்றனர். பங்கீட்டுஅரிசியில் அரைக்கொத்துவெட்டுவதால் அரசாங்கத்தின் உணவுமானியத்தில் 1கோடியே 10இலட்சம்ரூபா மிச்சமஏற்படுமென்றும், வெளிநாட்டுச் செலவாணியில் 5கோடியே 50இலட்சம்ரூபா மிச்சம் ஏற்படுமென்றும் நிதிமந்திரி தெரிவித்திருக்கின்றார்.

### பட்டினசபையின் வேண்டுகோள்

தீவுப்பகுதிமக்களின் வசதியைக் கருதித் தீவுப்பகுதிக்கென்று டிஸ்திறிக்கோடுஒன்றை நிறுவுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் பிரேரணை ஒன்று ஊர்காவற்றுறைப்பட்டினசபையின் கூட்டம்ஒன்றில் ஏகமனதாக நிறைவேறியிருக்கிறது.

### காலிமா நகரசபை

திறமையின்மை, நிர்வாகசீர்கேடு என்பனகாரணமாகக் காலிமுனிசிப்பல் சபையைக் கலைத்துவிடுமாறு தலதாபனமந்திரி உத்தரவிட்டுள்ளார். அதனால்சபையை நிர்வகிக்க விசேட கமிஷனர் ஒருவர் நியமனஞ்செய்யப் பெற்றிருக்கிறார்.

### மூன்றரை இலட்சம்ரூபா

கொழும்பைச்சேர்ந்த ஒருவர்த்தகரான ஆண்டியாப்பிள்ளை என்பவர் ஒன்றரைஇலட்சம்ரூபா பெறுமதியுள்ள கைக்கடிகாரங்களைக் கொழும்புக்குக் கடத்திச்செல்ல முயன்றபோது யாழ்ப்பாணப் புகையிரதநிலையத்திலே சுங்கஅதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து, யாழ்ப்பாண உதவிச் சுங்க கலெக்டர் அத்தனைகடிகாரங்களையும் பறிமுதல்செய்ய உத்தரவிட்டதோடு அவருக்கு மூன்றரை இலட்சம் ரூபா அபராதமும் விதிக்கலாயினர்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**தத்துவ வழக்கு இல. T 475**

அராலி கிழக்கு
காலஞ்சென்ற கணவதிப்பிள்ளை கந்தையாவின் ஆதனத்தின் தத்துவம்
— இறந்தவர்

அராலி கிழக்கு
கணவதிப்பிள்ளை கந்தையா
கைம்பெண் கனகாம்பிகை
— தத்துவகாரி.

நீர்வேலி
1. கந்தையா விநாயகமூர்த்தி, ஐக்கியசங்க பரிசோதகர், தற்போது வவுனியா.
2. கந்தையா மகள் பஞ்சலட்சுமி
— உரித்தாளர்கள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் T. 475-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணி 1962-ம்ஆண்டு புரட்டாதிமீ 8-ந் திகதி (8-9-62) சனிக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு, கோப்பாய் கோயிற்பற்று நீர்வேலிஇறை, "இராமாவில்" பரப்புநிலஇலாச்சம் 25. ஆனால், சேவைபிளான்படி பரப்பு நிலஇலாச்சம் 25 உம், குழி $14\frac{1}{8}$ உம்,கிழக்கு எல்லையில் இருக்கின்ற கிணற்றில் பங்கும். எல்லை: வடக்கு—காலஞ்சென்றகணவதிப்பிள்ளை கந்தையாவின் காணி. கிழக்கு—ஒழுங்கையும், சிதம்பரநாதர் பெண் அன்னப்பிள்ளையின் காணியும். மேற்கு—காலஞ்சென்ற கணவதிப்பிள்ளை கந்தையாவுக்கும், வேலுப்பிள்ளை அருளையாவுக்கும் உரிய காணிகள். தெற்கு—குருமூர்த்தி அருளையாவுக்கும், மறுபேருக்கும் உரிய காணிகள். இதடங்கலும்.

**சி. செ. மாரிமுத்து**
கொம்மிசனரும், விலைமதிப்பாளரும்.
விதானைவளவு, சித்தன்கேணி,
17-7-62.

## 3-ம் வருட மரண ஞாபகம்



**செல்வன் யோசவ் அன்ரனி (கிளேவர்)**

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 18-6-1958 | 8-8-1959 |

**மூவாண்டு ஓடிமறைந்ததுவே எம்மகனே,**
**உன்னத்தில் மூண்டகனல் தூர்ந்ததில்லை,**
**சீரான்ட எம்மவர் தீராத் துயர்தீர,**
**பூராணும் ஈசன்பதம் எம்மவர்க்காய்**
**வேண்டுவாயே.**

மகனை இழந்து துயருறும்,
எம். விக்ரர் இம்மனுவேலும், பாரியாரும்
வால்ரர் (சகோதரர்)
உதயநிசை, ஊர்காவற்றுறை.

## முதலாம் வருட மரணஞாபகம்

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 10-8-'09. | 11-8-'61. |

எனது அருமை மனைவியும், எங்கள் அருமைத் தாயாரும், மல்லாகம் புதுமைமாதா கோவிலைச் சேர்ந்தவருமான திருமதி ஞானம்மா ஐயாத்துரை அவர்கள், எம்மை விட்டுப்பிரிந்து இன்றோடு (11-8-62) ஒருவருடம் பூர்த்தியாகின்றது.

இதனைக் கண்ணுறும் சகலரையும் இவருடைய ஆத்மா சாந்தியடைய, இறைவனிடம் இரந்து மன்றாடும்படி வேண்டுகின்றோம்.

இவர் பிரிவால் துயருறும்
கணவர்—நீக்கிலஸ் ஐயாத்துரை
தாயார்—தானியேல் அன்னம்மா
பிள்ளைகள்—திருமதி இராசையா,
லீனஸ் கிளமென்ட்,
பிலிப் நேரி,
யஸ்ரின்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 4080**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

நல்லூர், யாழ்ப்பாணம்
செல்லர் நடராசா
கைம்பெண் கண்ணம்மா —வழக்காளி
எதிராக
கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்
1. அதிரியாம்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை
2. ஷீயூர் பெண் அந்தோனியாப்பிள்ளை
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B. 4080-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி,பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1962 ஆண்டு புரட்டாதிமீ 8-ம் உ சனிக்கிழமை முற்பகல் பத்துமணிதொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 2,944-ம், ரூபா 2,000 க்கு 13-6-61 தொடக்கம் 11-10-61வரை 11வீதமானவட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதமானவட்டியும் கோட்டுச்செலவு ரூபா 204-35 சதம்.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோயிற்பற்று சுண்டிக்குளியிறை "முதலைக்கேணியடி" உறுதிப்படி பர. நில. இலா. 3. ஆனால் உத்தரவுபெற்றஉலாந்தா J. மனுவல் 737-ம் இலக்கத்தில் தயாரித்த 15-6-54-ல் திகதிகொண்ட அளவுபடத்தின்படி பர. நில. இலா. 3, குழி ஒன்றும், வீடும், குசினியும், கிணறும், செய்பயிர் வான்பயிர்களும், மற்றும்அதற்குரியவைகளும். இதில் மேற்குப்பக்கமாய் பர. நில. இலா. ஒன்று, குழிபத்து (பர. நில. இலா. 1, குழி 10) இந்தப் பர. நில இலா. 1, குழி 10-க்கும், அதற்குரியவைகட்கும் எல்லை: கிழக்கு — யோக்கியம் எட்வின் இராசநாயகத்திற்கு விற்கப்பட்ட இதன் மிகுதியாதனம். வடக்கு — S. ஞானசைப்பிள்ளைக்கும் பெண் மரியம்மாவிற்குமுரியவாதனமும், கையொழுங்கையும். மேற்கு — ஒழுங்கை. தெற்கு — கிழக்குப்பக்ககாணிக்குப் போவதற்காய் விடப்பட்ட 3முழ ஒழுங்கை.

**வை. சாம்பமூர்த்தி.**
காணரகர் கொம்மிஷனர்.
1962-ம்ஆண்டு ஆடிமீ 19-ந்திகதி

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

எனது சகோதரன் கடூரமான வியாதி கண்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவந்தார். வருத்தம் கவலைக்கிடமாய் இருப்பதாக டக்றர்மார் கூறினர். ஈற்றில் யான் சதாசகாயத்தாயில் நம்பிக்கை வைத்து இரந்து கேட்டேன். இப்போது இருந்ததிலும் பார்க்க எவ்வளவோ சுகம் பெற்று வருகிறார். இன்னும் பூரணசுகம் பெறப் பிரார்த்திக்கிறேன்.

ச. மரியம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### ஆவணி மாதம்

| | | | |
|---|---|---|---|
| 29 | ஞா | இஸ்பிரீத்துசாந்து ஆக. பின் 7-ம் ஞாயிறு (வி. ம.) | ப |
| 30 | தி. | ம. (காலதினம்) | ப |
| 31 | செ. | அர்ச். இஞ்ஞாசியார் | வெ |
| 1 | பு. | ம. (காலதினம்) | ப |
| 2 | வி. | அர்ச். அல்போன்ஸ் லிகோரியார் (அர்ச். மூடியப்பர்) | வெ |
| 3 | வெ. | ம (காலதினம்) யே. | ப |
| 4 | ச. | அர்ச். திமிங்கு ம. | வெ |

# சத்தியவேத பாதுகாவலன்

1962-ம் ஆண்டு ஆவணிமாதம் 5-ந் தேதி

## சுதந்திரமும் சுபீட்சமும்

எமதுநாடு சுதந்திரம் அடைந்து பதினுன்கு ஆண்டுகள் கடந்து விட்டன. சுதந்திரம் பெற்ருேம். பொருளாதார சுபீட்சத்தை அடைந்தோமா?

விவசாயத்துறையில் ஆண்டுதோறும் கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவிடப்படுகின்றன. நாளுக்குநாள் புதிய திட்டங்கள் தீட்டப்படுகின்றன. செயலாற்றப்படுகின்றன. விவசாய இலாகா அளிக்கும் புள்ளிவிபரங்கள் மகிழ்ச்சியூட்டுபவையாக அமைகின்றன. ஆயின் அரிசிக்காக அயல்நாடுகளிடம் கையேந்துந்நிலை இன்னமும் மாறவில்லை.

அரிசிக்கப்பல்களை எதிரியின் விமானங்கள் தாக்கின. அதன் பயனுக உணவின்றித் தவித்தோம் அன்று. அயல்நாடுகளில் பொருளாதார நெருக்கடி. நெல்விளைச்சல் குறைவு. அதன்விளைவு அரிசியின் அளவு குறைகிறது இன்று.

இருபதுவருடங்கட்கு முன்னிருந்த அதே உணவுநிலைமை மீண்டும் வந்துவிட்டது. கடந்தகால அனுபவங்கள் நல்ல பாடத்தைக் கற்றுக்கொடுக்கவில்லை. நிகழ்கால நிகழ்ச்சிகளாவது எம்மை விழிப்படையச் செய்யாதா? முதலில் தவறு எங்குளது என ஆராய்வோம்.

நிதியமைச்சரை, ஆட்சியாளரைக் குறைகூறுகின்றனர் பலர். அரிசி வரத்துக்குறைந்ததால் ஈழத்து மக்களை முழுப்பட்டினியாகத் தவிக்கவிடுவதிலும் அரைப்பட்டினியாக நிலைமையைச் சமாளிக்க அவர்கள் கருதுகின்றனர். இன்றைய உணவுத் தட்டுப்பாட்டுக்கு ஆட்சியாளர்களை மட்டும் நொந்துகொள்வதால் பயனில்லை.

சுதந்திரம்பெற்ற ஒருநாடு பொருளாதாரத்துறையில், சுபீட்சப் பாதையில் முன்னேறுவதற்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம். படித்துப் பட்டம்பெறவேண்டும். மருத்துவனுக, அரசாங்க பணியாளனுக, பேராசிரியனுக மாறவேண்டும் எனக் கனவு காண்கின்றனர் நம் இளவல்கள். உயர்ந்த உத்தியோகம் நிறைந்த ஊதியம். அங்கு படாடோபமான வாழ்வு காத்திருக்கிறது. எனவே உணவுற்பத்திபோன்ற ஓய்வுநேர முயற்சிகளிலீடுபடுவது அவமானம் எனக் கருதுகின்றனர் உத்தியோகத்தர்கள்.

இந்நிலை மாறுதல்வேண்டும். அமெரிக்காவும், ருஷியாவும் பொருளாதாரத்துறையில் உயர்ந்தது எதனுல்? அந்நாடுகள் உணவுக்காக கோடிகோடியாக அயல்நாடுகட்குப் பணத்தை அனுப்புவதில்லை. பட்டம்பெற்ற வாலிபர்கள் விவசாயத்தில் நவீனமுறைகளைக் கையாளுகின்றனர். உணவுற்பத்தியென்பது அந்நாடுகளில் அவமானமிக்கதோர் தொழிலாகக் கருதப்படுவதில்லை.

பலதுள்ளி பெருவெள்ளம். நமக்காகவும் நாட்டுக்காகவும் சிறிது தியாகம் செய்வோம். இளைஞர்களின் முழுநேர விவசாயம் இந்நாட்டின் உணவுத்தேவையில் பாதியையாவது பூர்த்தியாக்குதல் வேண்டும். காய்கறித்தோட்டம், சிறு கால்நடைப்பண்ணை, சிறப்பாக கோழிவளர்ப்பு என்பவற்றிலெல்லாம் உததியோகத்தர்கள், ஆசிரியர்கள் என்போர் தம் ஓய்வுநேரங்களில் ஈடுபடலாம். அது சிறந்த தேகாப்பியாசமாவதுடன் சுயதேவைகளையும் பூர்த்திசெய்ய உதவும்.

அரைப்படி குறைக்கப்பட்டதால் ஆட்சியாளர்களைத் திட்டுவதும், போராட்டம் நடாத்துவதும் எமது வயிற்றை நிரப்பிவிடாது. அயல்நாடுகளிடம் அதிகவிலைக்கு அரிசியைப்பெற்று மக்களுக்குக் குறைந்தவிலையில் விநியோகிக்கும் முறையை ஒழித்தே தீர்வது எனத் தீர்மானம் எடுத்துக்கொள்வது ஒவ்வொரு இலங்கைப்பிரசையினதும் கடமை.

அரசாங்கத்தையும், அயல்நாடுகளையும் அரிசிக்காக எதிர்பார்க்கும் அவலநிலையை மாற்றுவோம். எம்குடும்பங்கட்குத் தேவையான காய்கறி மற்றும் உணவுப்பொருட்களில் ஒருபகுதியையாவது நாமே உற்பத்தியாக்க முயலுவோம். இதனுல் நாட்டுக்கும் நமக்கும் சுபீட்சம் உண்டாக வழிசெய்வோம்.

## செபஅப்போஸ்தலசபை ஆவணி 1962

**பொதுக்கருத்து:**

சகல கிறீஸ்தவர்களும் தங்கள் உருக்கமான செபம், தாங்களே எடுத்துக்கொண்ட சரீரஒறுத்தல் தபசுகளினுல் திருச்சங்கத்துக்கு தவ வேண்டிக் கொள்வது,

**வேதபோதககருத்து:**

மிஷன்நாடுகளிலே வெவ்வேறு சாதியினரிடையே தொண்டாற்றுந் திருச்சபை அச்சாதியினரது குணுகுணங்கள் தேவைகட்கொப்ப தம் [illegible] யை சேர்த்[illegible] மன்ருடிக்கொள்வது.

## திவ்விய இஸ்பிரீத்துசாந்துவின் திருநாளுக்குப் பின்வரும் 8-ம் ஞாயிறு

**இன்றைய பூசையின் சாரம்:** சரீரநன்மைகளைத் தேடிவாழும் இன்றைய சமுதாயத்தின் மக்களுக்கும், ஆத்துமநன்மைகளை நாடிவாழும் பிரகாசத்தின் பிள்ளைகட்கும்இடையே உள்ள வேற்றுமை.

நாம் ஓய்வுச்சம்பளம் பெறுபவர்களல்ல. நாம் மோட்சத்தையடையும் போது, இறைவன் எமதுஇதயங்களில் வாரியிறைத்த வரப்பிரசாதத்தோடு நெருங்கி ஒத்துழைத்து நாம் தேடிக்கொண்டவோர் பொக்கிஷம் தானிது என்பதை நாம் உணர்வோம் பாவத்தின்தோஷத்தால் தாளிடப்பட்டிருந்த மோட்சவாசலை எமக்காகத் தமது வேதனைநிறைந்த சிலுவைமரணத்தினுல் கிறீஸ்து திறந்துவிட்டார். நாம் அதனுள் பிரவேசித்தேயாகவேண்டும். ஞானஸ்நானம் பெற்றதிலிருந்து நன்மைசெய்வதற்காக நாம் போராடிக்கொண்டிருக்கிறேம். இந்தப்போராட்டம் பொதுத் திருச்சபையில் மட்டுமன்றி, ஒவ்வொரு ஆன்மாவிலும் நடைபெறுகிறது. நலிந்துவரும் பாழும் உலகின்மத்தியில் கிறீஸ்துவின் பரிசுத்த மாசில்லா மணவாட்டியாகிய திருச்சபையானவள் தன் இருகரங்களையும வான்நோக்கிஉயர்த்தித் தனது மணவாளனின் சோதனைஎன்னும் உலையில் இன்னும் அதிகமாகப் பரிசுத்தமடைய வேண்டுகிறுள்.

ஒவ்வொரு ஆன்மாவின்வாழ்விலும் இத்தகையசோதனை நடக்கிறது. சரீரத்தின் இச்சைகளும், வாழ்வின் அகங்காரமும் கெட்டவைகளையே நோக்கி, அவைகளிலேயே லயிப்பதற்குக் கண்கள் கொண்டுள்ள ஆவல்களும் ஒவ்வொரு ஆன்மாவையும் ஆட்டிவைக்கின்றன. இவற்றின்போக்கை நாம் பின்பற்றுவோமானுல் உலகபந்தங்களில் சிக்கியோரைப்போல் நாமும் கிறீஸ்துவினின்றும், அவரது சுவிசேஷத்தினின்றும் பிரிந்துவிடுவோம். கிறீஸ்துவின் இரட்சணியவார்த்தைக்குச் செவிமடுப்போமானுல், பிரகாசத்தை நோக்கிச்செல்வோம். "அப்பா" (ABBA - FATHER) என நாம் அழைக்கக்கூடிய மோட்சபிதாவை நோக்கிச் செல்வோம். சாத்தானைப் பொய்யின்பிதாஎனக் கிறீஸ்து இகழ்ந்தார். கடவுள் உண்மையின் பிதா; ஏனெனில், அவரே உண்மை.

**செபமும் போதகப்பகுதியும்:**

இந்தஆராதனையின் ஆரம்பபாகத்தில் நாம் கடவுளைக் கருணைஉள்ளவர் என்றும், நீதியான ஒருவர்என்றும், அதிகமாய்ப் புகழப்படவேண்டிய ஒருவரென்றும் போற்றுகிறேம். அவர் எம் எல்லோருடையவும் தந்தையல்லவா? பிரகாசத்தின் பிள்ளைகளாகிய நாம்எல்லோரும் கிறீஸ்துவசமுதாயமாக ஒன்றித்து, சரியானவற்றையே சிந்தித்தும், ஆற்றியும் அவரின்றி வாழமுடியாத நாம், அவரின் சித்தத்திற்கமைந்து வாழ மன்றுடுகிறேம். ஆனுல், ஐயகோ! எமது ஞாபகசக்தியோ மிகவும் குறைவானது. கடவுள் எமதுஆத்துமத்தில் செய்திருக்கும் அபரிமிதமான நன்மைகளை நாம் மறந்துவிடுகிறேம். ஆகவே, அர்ச். சின்னப்பர் உரோமருக்கெழுதிய **நிருபத்தில்** நாம் சரீரத்திற்கேற்பச் சீவிக்காமல் இஸ்பிரீத்துசாந்துவிற்கேற்பச் சீவிக்க வேண்டுமென்று ஞாபகமூட்டுகின்றுர். இந்த இஸ்பிரீத்துசாந்துவே எமது வாழ்க்கைவழிகாட்டி. எமதுஆவி பயத்தின் அடிமைத்தனத்தின் ஆவியல்ல. ஆனுல், ஒளியின் சுதந்திரத்தின் ஆவி. நாம் **கிறிஸ்துவோடு** மோட்சஇராச்சியத்தின் வாரிசுகள். ஞானஸ்நானத்தில் ஆரம்பித்து, எமதுவாழ்நாள்பூராவும் தொடர்ந்த ஞானமாற்றத்தை **நிருபமும். சுவிசேஷமும்** உரைக்கின்றன. சுவிசேஷத்தில் காணக்கிடக்கும் [illegible] வெறும் மனிதத்தன்மை நிறைந்தவனும், முன்புத்தி யுள்ளவனுமாவான். ஆனுல், ஆவியினுல் வழி நடத்தப்படுபவன்—புதியஏற்பாட்டை முற்ருக ஏற்றுக்கொண்டவன் — புகழுக்குரியவன். ஞானஸ்நானம் அவனது விசுவாசத்திலும், நம்பிக்கையிலும், அன்பிலும் பொழிந்த விவேகம், நீதி, திடம், விமரிசைமுதலிய இஸ்பிரீத்துசாந்துவின் கொடைகளோடு கூடிய முன்புத்தியுள்ளவனுவான்.

### தேவநற்கருணைத் திருச்சடங்கு

**காணிக்கைச் செபத்தில்** அகங்காரம் நிறைந்தோரினதும், தாழ்ச்சியுடையோரினதும் வேற்றுமை வெளிப்படுகின்றது, **அமைதிமன்ருட்டில்** காணிக்கைகளை ஆசீர்வதிக்கக் கோருகையில் தற்காலசீவியத்தைப் பரிசுத்தப் படுத்துவோரினதும், அதைப் பாழாக்குவோரினதும் வேற்றுமைகள் எடுத்துக்காட்டப்படுகின்றன. நிருபத்தில் கூறப்பட்டிருக்கும் வார்த்தைகட்கியைந்தும், சுவிசேஷம் எமக்குத் தரும் இறுதிச்செய்திக் கேற்பவும் நாம் நடந்தாற்றுன் அமைதிமன்ருட்டில் கூறப்பட்டிருக்கும் நித்தியபேரின்பங்களை நாம் அனுபவிக்கமுடியும்.

ஒருகுடும்பத்தின் பிள்ளைகள் தங்கள் இல்லத்தைச்சார்ந்தே இனிமையைக் காண்கின்றனர். பிரகாசத்தின் பிள்ளைகள் ஐக்கியத்தினதும், சமாதானத்தினதும், அன்பினதும், ஆனுமானமாகிய தேவநற்கருணையில் இனிமையைக் காண்கின்றனர். மானிடபாவ வாழ்க்கைக்கும், கரடுமுரடுநிறைந்த கிறீஸ்தவ வாழ்க்கைக்கும் உள்ளபோராட்டத்தை எம் நாளாந்தவாழ்க்கையில் நாம் காண்கிறேம். ஆனுல், கிறீஸ்தவ வாழ்க்கையே ஈற்றில் வெற்றிபெறும் என்பது மறுக்கமுடியாத உண்மை. சீராகப்பெற்று, கிறீஸ்து எல்மில்உறைந்து ஒளிவீசுவதை உணர்ந்து, வாழ்ந்த நற்கருணைச்சீவியம் இப்போராட்டத்திற்கு ஓர்முடிவை ஏற்படுத்தி எமக்கு வெற்றியைத்தரும் என்பதில் ஐயமில்லை. ஆண்டவரின் இனிமையைச் சுவைத்தறியுங்கள். இன்றைய பூசை உங்கள்நாவில் இந்தச்சுவையைத்தான் நிலைக்கச் செய்யவேண்டும்.

## இஸ்லாமியர் ஆலயத்துள் நுழைந்தனர்

பல நூறு முஸ்லீம் ஆண், பெண், சிறுவர்கள் அல்ஜீரியாவிலுள்ள ஆசனக் கோவிலை ஆக்கிரமித்தனர். இவர்கள் ஆலயத்தைத் தீட்டுப்படுத்தும் நோக்கம்கொண்டிருக்கவில்லை. சனத்திரளின் நெருக்கத்தினுல் ஒரு சுரூவம் உடைந்தது.

அறிவாசையினுற் தூண்டப்பட்டடு, அம்மக்கள் ஆலயத் தளபாடங்களில் கைவைத்தனர். வந்தவர்களில் ஒருவன் பிரசங்கக்கூட்டிலேறி சனத்தைக் கண்டனஞ்செய்தான்; கேட்டுக்கொண்டிருந்தவர்கள் கரகோஷஞ் செய்தனர்.

தேசிய விடுதலைப்பட்டாளத்தவனொருவன் பின் பிரசங்கமேடையிலேறிக் குரானிலிருந்து சிலசுலோகங்களைக் கூறியபின் "மதங்கள் எல்லாவற்றிற்கும் மதிப்புத்தரவேண்டும்" எனச் சனத்தைக் கண்டித்தான். பொலிசாரும் பட்டாளத்தினரும் மக்களை வெளியேற்றினர்.

முன்பள்ளிவாசலொன்றிருந்த இடத்தில் கட்டப்பட்ட இவ்வாலயம் இஸ்லாமிய சிற்பமுறையான இரு கோபுரங்களைக்கொண்டிருப்பதால் கத்தோலிக்கர் தம் ஆலயத்தைக் கைப்பற்றினர் என்ற எண்ணத்தால் தூண்டப்பட்டிருக்கலாம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யேசுநேசர் சபை

உலகம் கடவுளை மறந்து, சீர்குலைந்து வருகிறது. மக்கள் மனதில் துர்நாட்டங்களும், குரோதம், வன்மம், பகைகளும் வளர்ந்து வருகின்றன. உலக சுக போகங்களின்மேல் உள்ள பற்றுதல்கள் அவர்களை ஞானக் குருடர்களாக்கி விட்டன. இந்த நிலையில் ஞானச்சீவியத்தை,— ஆன்மீகவாழ்க்கையைப்பற்றிச் சிந்திப்பவர்கள் மிகச் சிலர். ஆன்மீகவாழ்வு இச்சீர்கெட்ட சூழ்நிலையில் சாத்தியப்படுமா? என் ஐயுற்று மனச்சோர்வு அடைகின்றனர் இன்னுஞ் சிலர். எப்படியாகிலும் புனிதவாழ்வு வாழ வழிவகைகள் தேடுகின்ற நல்ல மனமுள்ளவர்களுக்கு "முடியும், வெற்றிகரமாக முடியும்" என்று உற்சாகமூட்டுகிறார் சாள்ஸ் டீ வூக்கோ என்னும் புனிதர்.

யேசுவின் சாள்ஸ் சகோதரர் என அழைக்கப்படும் சாள்ஸ் டீ வூக்கோ என்பவரின் தீரம் நிறைந்த ஞானவாழ்க்கையும், அவர் காட்டியமுன்மாதிரிகையும், எழுதிய அறநூல்களும் உலகுக்கு அருமருந்துபோல உதவுகின்றது. அவரின் போதனைகளும், சாதனைகளும் அவரது முதல் சீஷனான வியோம் சுவாமியாரின் ஞானநூல்களும் வழிகாட்டுதலும் உலகுக்கு வழுக்கு நிலத்தில் கிடைத்த ஊன்றுகோல்போல உதவுகின்றது.

1917-ம் ஆண்டு சகாராப்பாலைவனத்தில் சாள்ஸ் டீ வூக்கோ என்னும் புனிதர் காலமானார். அவர் மறைந்தார். ஆனால் அவர்காட்டிய அறநெறி மக்கள் உள்ளங்களில் உயிர்க்களையுடன் நிலைத்திருக்கிறது அவரின் போதனைகளுஞ் சாதனைகளும் சிறப்பாக இளைஞர் உள்ளங்களைக் கொள்ளைகொண்டிருக்கின்றன. இதன்விளைவாகச் சாள்ஸ் டீ வூக்கோவின் நாமம் கத்தோலிக்க திருச்சபைக்குஉள்ளும்புறமும் அநேக இயக்கங்களோடு தொடர்பு பூண்டிருக்கின்றது.

இரண்டாம் உலக மகாயுத்தத்துக்குப்பின் சாள்ஸ் டீ வூக்கோவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிய ஞானக்குடும்பம் நாற்றிசையும் பரந்து அநேக பத்திச்சபைகளைக் கொண்டதாகவிருக்கின்றது. யேசுவின் சிறிய சகோதரர், சகோதரிகள் சபைகளுடன், விவாகமான, ஆகாத இல்லறவாசிகளைக் கொண்ட "இல்லறச் சகோதரர் சபையும்" அடங்கியதாகவிருந்தது.

இந்தச் சூழ்நிலையில் "ஆஸ்" என்னும் இடத்தில் யேசுவின் சிறிய சகோதரர் சபையின் ஸ்தாபகரான வியோம் சுவாமியாரின் முகாமையில் 1952-ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் தேவ தொண்டுக்குத் தம்மை அர்ப்பணித்த ஒரு கன்னியர் குழுவினர் ஞானஒடுக்கஞ் செய்தனர். ஞான ஒடுக்க முடிவில் அக்குழுவினரால் யேசு நேசர் சபை உருப்பெற்றது.

1947-ம் ஆண்டில் 12-ம் பத்திநாத பாப்பரசரின் "புனித அந்தஸ்து" என்னும் பிரகடனத்தின்படி இல்லறத்தவர்கள் புனிதசபைகள் ஸ்தாபிக்கப்படலாம் என்னும் உத்தரவு பிறந்தது. அவ்வுத்தரவை அனுமானித்து மகாமேன்மைதங்கிய பொவென்றறிஸ் ஆண்டகை வியோம் சுவாமியாரின் வழிநடத்தலின்கீழ் யேசுநேசர்சபையை ஸ்தாபித்தார். இச்சபை ஒரு கன்னியர்சபை இச்சபைக்கன்னியர், யேசுவுக்காகவும், வேதாகமப்பரப்புதலுக்காகவும் தங்களை முழுதும் அர்ப்பணிப்பர். தமது பரிசுத்ததனத்தைக் காப்பாற்றுவதற்கு உதவியாக அமைச்சல், தரித்திரம், வறுமை, கற்பு என்னும் மூன்று வாக்குத்தத்தங்களையும் தலைமேல் சுமந்தனர். யேசுவின் சிறிய சகோதரர், சகோதரிகளைப் போன்று, யேசுவோடு உடன் மீட்பர்களாகவும், உலக இரட்சணியத்துக்காகத் தம் சீவனை முதலாக இழக்கும் ஆசையுடனும் முன்வந்தனர். இவைகளே சபையின் நோக்கங்களாகும்.

வளரும்



வண. லூயிஸ்பொன்னையா, O.M.I. சுவாமி அவர்கள்

உரோமாபுரி வேதபோதகக் குருமடத்திலே சென்ற ஆண்டு ஆடி 12-ந்திகதியன்று குருப்பட்டம் பெற்றுக்கொண்ட வண. லூயிஸ் பொன்னையா, O.M.I. சுவாமி அவர்கள் நிகழும் ஆவணி மாதம் 9-ந் திகதி வியாழக்கிழமை காலை 7-30 மணிக்குத் தமது பங்குவிசாரணைக் கோவிலாகிய யாழ்ப்பாணம், அர்ச். ஸ்நாபக யுவானியார் ஆலயத்தில் முதன்முறையாகத் திவ்விய பூசைப்பலி நிறைவேற்றுவார்.

## சமையல் அறையில்.......

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்குப் பேசிய கூலியைக்கொடுத்து, நீதியை நிலைநாட்டினன் என்றார் அப்பா. இதற்கு என்னவிளக்கம் அப்பா என்றுகேட்டாள் அக்கா. நமது திருமறையில் குழந்தைப்பருவத்தில் ஞானஸ்நானம் பெற்று சீவியம்முழுதும் வேதநெறியில் வளர்கிறார்கள் சிலர். சிலர் நடுத்தரவயதில் பிறமதங்களைக் கைவிட்டு எம்மதத்தில் இணைகிறார்கள். வேறுசிலர் செய்யக்கூடாத அக்கிரமங்களையெல்லாம் செய்துவிட்டுக் கடைசிநிமிடத்தில் இறைவன் அருளால் மனந்திரும்புகின்றனர். எல்லோருக்கும் மோட்சசம்பாவனை கிடைக்கிறதே. சிலவேளையில் அவரவர்கள் பேறுபலன்கள் வித்தியாசப்படலாம் என்று விளக்கம் தந்தார் அப்பா.

சமையலறையிலிருந்து [illegible] நாடு எனச் சிரித்துக்கொண்டே பந்தியை முடித்துக்கொண்டு அனைவரும் எழுந்தனர்.

## ● சுவிற்செலாந்து

சத்திய திருச்சபையின் புதுவேத நாடுகட்கென வசூலிக்கப்பட்ட தபசுகால நிதிக்கு சுவிற்செலாந்திய கத்தோலிக்கர்களிடமிருந்து 300,000 பவுண்கள் திரட்டப்பட்டனவாம்.

## ● பிரித்தானியா

அண்மையில் அர்ச்சியசிட்டர்கள் வரிசையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட புனிதர் மாட்டின் தே போரஸ் அவர்களின் பெயரால் பிரித்தனில் ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இவ்வாலயம் பெத்போட்சயரில் உள்ள வியூசி கிராமத்தில் அமைந்துளது.

# இவ்வார அர்ச்சியசிட்டவர்

## ஈடும் எடுப்பும் இல்லாக் கட்டளைக்குரு

### அர்ச். ஜோண்மேரி வியானி

தேதி — ஆவணி 8

### "கேளுங்கள் கொடுக்கப்படும்"

தேவன் எம்மிடம் விரும்புவது எமது நல்மனத்தையே. அதை நாம அவருக்குக்கொடுப்போமானால் அவர் நம்மைச்சுத்தஞ்செய்து தமக்குஉகந்த மாணிக்கங்கள் ஆக்கிக்கொள்ளுவார். ஜோண்மேரி வியானி கல்வியறிவு இல்லாதவர். விவேகத்தில்மிகக்குறைந்தவர். ஆனால், தேவனுக்குத் தன்னை முழுமையாக ஒப்புக்கொடுத்தார். தாழ்மைமிகுந்தவர். குருவாகவரத் தனக்கு இருந்த ஆசையைத் தேவனிடம்கூறி, இரந்து நின்றார். சர்வ வல்லபராகிய தேவன் அவருக்குவேண்டிய வரப்பிரசாதங்களை அருளி, உலகின் கட்டளைக்குருமார் வரிசையில் முதல் அர்ச்சியசிஷ்டராக விளங்கவைத்தார்.

### இளம் பராயம்

ஜோண்மேரி வியானி ஒரு வறிய பிரான்சிய கத்தோலிக்ககுடும்பத்தைச் சேர்ந்தவர். தென்பிரான்சிலே லையன்ஸ் பிரதேசத்திலே, டார்டியி எனும் குக்கிராமத்தில வசித்துவந்தார். அவரது குடும்பத்தினர் ஒரு விவசாயப் பண்ணையில் தொழிற்செய்து சீவியத்தைக்கழித்து வந்தனர். அக்காலம் பிரான்சிய அரசியல் புரட்சிக்காலம். கத்தோலிக்க குருமாரும், கத்தோலிக்கஇல்லறத்தோரும் அரசியல்விரோதிகளென எண்ணப்பட்டுவந்த காலம். பள்ளிக்கூடப்படிப்பில்லாது மறுவறிய பிள்ளைகளைப்போல வியானியும் வளர்ந்துவந்தார். ஆனால், வேதஅபிமானம்மிகுந்த குடும்பத்தைச்சேர்ந்தவரானதால், ஆபத்துக்களைப் பொருட்படுத்தாது தன்னால்கூடியளவு வேதத்தை அனுசரித்துவந்தார். 11-ம் பராயத்தில் மிகப் பக்திவணக்கத்துடன் முதல்நன்மை பெற்றுக்கொண்டார். அதன்பின் வேதவைராக்கியத்தில் வேகமான்வளர்ச்சி ஏற்பட்டது. குருமார் தமது உயிரையும் பொருட்படுத்தாது செய்துவந்தவேலையில் அவர் மனம் பதிந்தது. தானும் ஒருகுருவாய் வந்தாலோஎனும் தணியாத ஆசை ஏற்பட்டது. அதற்குத் தடைகள் இருந்தன. குடும்பத்தின் சீவனோபாயத்துக்கு இவர்உழைப்புத் தேவையாய் இருந்தது. கையில் பணமோ இல்லை; அதுமட்டுமல்ல, கல்வி அறிவு இல்லை. இத்தடைகளை நீக்க முயற்சித்தார். நாளாந்த உழைப்பின்பின் கட்டளைக்குருவைநாடி எழுத, வாசிக்கப் படித்துக்கொண்டார். அவர் பங்கின் கட்டளைக்குரு இவருடைய தேவநேசத்தையும், மனநிலையையும் நன்கு அறிந்து, ஏற்பட்ட இடைஞ்சல்கள்எல்லாவற்றையும்மேற்கொண்டு, இவரை இறுதியாகக் கிறனோபிள் (Grenoble) பிரிவின் மேற்றிராணியாரால் குருப்பட்டம் பெறவைத்தார். தனது இலட்சியம் நிறைவேறியது கண்டு வியானிசுவாமியாருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கோ அளவில்லை.

### குருத் தொண்டு

பூசைப்பலிஒப்புக்கொடுத்தல், ஞான உபதேசம் கற்பித்தல், பாவசங்கீர்த்தனம் முதலிய தேவதிரவிய அனுமான ஆறுதல்களைப் பிறருக்கு அளித்தல் முதலியவற்றில் அவர்மனம் பூரித்தது. அவற்றுக்குத் தம்மை மெனமேலும் தகுதிசெய்யக் கடும்ஒறுத்தல் உபவாசங்களையும், கசைஅடிகளையும், இராப்பகல் தேவநற்கருணை ஆராதனையையும் மேற்கொண்டுவந்தார். பாலப் பராயத்தில் இருந்துவந்த தேவதாயின் பக்தியும் மேலும் வளர்ந்து, அவரது தொண்டுக்கு இனிமையாக்கிற்று. முதன்முதல் இவர் தொண்டாற்றிய இடம் "ஆர்ஸ்" என்னும் பகுதியே.

### பாலைவனம் தேன்பொழிந்தது

இங்கே இவர் வேலைதொடங்கிய காலத்திலே இப்பகுதி ஒரு ஞானப்பாலைவனமாகவே இருந்தது. கற்றவர்கள் மிகச்சிலர். வேதஅனுசரணை மிகக்குறைவு. வியானிசுவாமியார் மனந்தளராது தனது மரணபரியந்தம் 41 வருடகாலமாக அரியதொண்டுபுரிந்து வந்தார். தேவதாயாரின் அடைக்கலத்தில் தமது பங்கைஒப்படைத்து, படிப்படியாகச் செபமாலைப்பக்தியை அவர்களிடையே ஊன்றவைத்தார். ஒவ்வொரு குடும்பத்தையும் தரிசிப்பார். அவர்களுக்காகத் தம்மை ஒறுப்பார். தமதுசெபதபங்களை அவர்களுக்காகஒப்புக்கொடுப்பார். அறியாமையை அகற்றத் தம்மாலானவற்றைச் செய்வார். ஞாயிறுநாட்களில் சரீரப்பிரயாசையான வேலைசெய்யும் பழக்கமுடைய அம்மக்களை அதில்நின்றுநீக்கி, ஞானக் கருமங்களில் ஈடுபடுத்துவார். பல பக்திக்கூட்டங்கள் எழுந்தன. பள்ளிக்கூடங்கள் நிறுவப்பட்டன. இவ்வாறு ஞானப்பாலைவனமாய் இருந்த 'ஆர்ஸ்' பங்கு தேன்பொழியும் இடமாயிற்று. இதைக்கண்ணுற்ற பசாசு ஆத்திரங்கொண்டு அவருக்கு நேரிலே பல இடையூறுகளை வருவித்தது. அதன் கோளாறினால் பலஇரவுகள் நித்திரை இல்லாதிருந்தார். உணவு இல்லாது பட்டினியாய் இருந்தார். அவர் வீடு தீப்பற்றி எரிந்தது. இவை எல்லாவற்றையும் சகித்துக்கொண்டார். இறுதியில் வெற்றி அவரதே. சாத்தானும் தோல்வியை ஒப்புக்கொண்டு ஓடிவிட்டது. இந்நிகழ்ச்சிகள்யாவும் அவரது தொண்டுக்கு உறுதுணையாயின. அவரது ஆலோசனையைநாடி அநேகர் அவ்வூர் வந்தனர். அவரிடத்திலே பாவசங்கீர்த்தனம்செய்ய இராப்பகலாகப் பலர் காத்திருந்தனர். பாலைவனமும் தேன்பொழியலாயிற்று.

### சகலமும் தேவனின் மகிமைக்கே

'ஆர்ஸ்' பகுதியில் தேவன்காட்டிய பெருங்கருணையைச் சிந்தித்து வியானிசுவாமியார் பெரும் சந்தோஷமுற்றார். அவரது இறுதிக்காலமும் மூட்டிற்று. தேவன் அறிவிலியாகியதன் குலம் அனேகஆயிரக்கணக்கானோருக்குச்செய்த பெரும் அனுக்கிரகத்துக்காக நன்றித்துதி கூறுவதிலே அவருடைய அந்தியகாலம்கழிந்தது. தமது தள்ளாப்பராயத்தில் 1859-ம் ஆண்டு ஆவணிமாசம் 4-ந்திகதி சந்தோஷமான மரணத்தைஅடைந்தார். நல்மனமுள்ளவர்களுக்குத் தேவன் மோட்சத்தில் உன்னதபதவி அளிப்பார்என்பதை அர்ச்சியசிஷ்ட ஜோண்மேரி வியானியாரின் சரிதம் காட்டுகின்றது.

## ● கொங்கோங்

கடந்த தபசுகாலத்தில்மட்டும் கொங்கோங் நகரில் 2100 பேர் திருச்சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இவர்களுடன் சேர்த்து இந்நகரில் மொத்தம் 182,000 கத்தோலிக்கர்கள் இருப்பதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

## ● பிரான்ஸ்

கடந்த ஆனிமாதத்தில் லூர்துபதியில் சர்வதேச படைவீரர்கள் தினமொன்று அனுஷ்டிக்கப்பட்டது. இத்தினத்துக்கு இருபது நாடுகளின படையணிகளிலிருந்து மொத்தம் 45,000 இராணுவத்தினர் சமுகமளித்திருந்தனர். இவர்களுள் புதிதாகச் சுதந்திரமடைந்த ஆபிரிக்கநாடுகள் ஐந்தின் வீரர்களும் அடங்குவர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மகளிர் மன்றம்

அன்புச் சோதரிகளே,

இதோ ஆவணிமாதம் வந்துவிட்டது. தேவதாயின் திருநாட்கள் பல இம்மாதத்தை மகத்துவமுள்ளதாக்குகின்றன. 5-ந் தேதி சலேத்மலைமீது இரு சிறுவர்கட்குத் தம்மைக் காட்சியில் காட்டிய பனிமயமாதா திருநாள். 12-ந் தேதி தேவதாயார் மரணித்த தினமாகும். 15-ந் தேதி மரியன்னையின் ஆரோபணத்திருநாள். அத்துடன் பரலோக பூலோக இராக்கினியாக முடி சூட்டப்பட்ட நிகழ்ச்சியும் கலக்கின்றது. 22-ந் தேதியன்று பாத்திமாபதியின் எனது மாசற்ற இருதயம் வெற்றிகொள்ளும் எனக்கூறிய மாசற்ற இருதய நாயகியின் தினம்.

தேவதாயின் திருநாட்களை மோட்சவாசிகள் குதூகலமாகக் கொண்டாடு கின்றனர். நாமும் இத்திருநாட்களைப் பக்தியருட்சியுடன் கொண்டாட முயலுவோமாக.

அன்புச் சோதரி ரோஜா.

—※—

## வீட்டுக் குறிப்புகள்

1. எலுமிச்சங்காயில் பாதியை உபயோகித்தபின் மறுபாதியை பழுதாகாமல் பாதுகாப்பதற்கு அதை ஒரு துப்பரவான பீங்கான் பாத்திரத்தில் கவிழ்த்துவைத்து ஒரு கண்ணடிக் கிளாசினுல் மூடிவிடவும். மறுநாள் வரை அது புதிதாகவே இருக்கும்.

2. இலைக்கீரையை மறுநாள்வரை வாடாமல் பாதுகாப்பதற்கு காகிதத்தை நீரில் நனைத்து அதனுல் இலைக்கீரையைச் சுற்றிவைக்கவும்.

3. கிண்ணங்களில் அழகுக்காக வைக்கும் மலர்கள் வாடாமல் இருப்பதற்கு மலர்களைத்தாங்கும் பாத்திரத்திலுள்ள நீரில் ஆஸ்ப்பரோ குளிகையைக் கரைத்துவிடவும்.

4. கண்ணடிப்பாத்திரங்களைப் பளபளப்பாக்குவதற்கு வாழையிலையைப் பிசைந்து சிறிது உப்புநீருடன் பாத்திரங்களைத் தேய்க்கவும். கண்ணடிச் சாளரங்கள், கதவுகளை மினுக்குவதற்கு பழைய பத்திரிகைகளை நீரில் நனைத்து உபயோகிக்கவும்.

5. காளாந்தம் தேநீர் தயாரித்தபின் ஊறிமுடிந்த தேயிலைச் சக்கையை எறிந்துவிடாதீர். பலநாட்கட்குச் சேர்த்துக் காயவைத்துக்கொள்ளவும். பாவித்த முட்டைக் கோதுகளையும் சேர்த்துவைக்குக. அதிக ஓடுகள் சேர்ந்தபின் இடித்துத் தூளாக்குக. இவை இரண்டையும் ரோஜாச்செடிகட்கு உரமாகப்போடுவது அதிகபயனைக்கொடுக்கும்.

6. தோடம்பழச்சாறு தயாரிக்கும் போது தோலைச் சீவிவிட்டுப் பின்பு பிழிந்தால் சாற்றில் ஒருவித கசப்பு சேர்வது தடுக்கப்படும். தோடம்பழம் எலுமிச்சம்பழச்சாறு தயாரிப்போர் முதலில் சீனியை நீரில் கரைத்துவிடுவது அவசியம். ஏனெனில் பழச்சாற்றிலுள்ள புளிப்பு சீனியைக் கரையவிடாது.

7. புடோல், கீரைபோன்ற தண்ணீர்ப்பிடிப்புள்ள காய்கறிவகைகளையும் இறைச்சிவகைகளையும் அவிக்கும் போது சிறிது உப்புநீர்மட்டும் சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும். அதிக நீர் சேர்த்தல் கூடாது. ஏனெனில், அவியும்போது நீர் ஊறுவதால் இருவித நீர்களும் சேர்ந்து அதிகநேரம் அவிக்கவேண்டியநிலை ஏற்படும். இதனுல் கறியின் ருசியும் சத்துகளும் அழிந்துபோகும்.

8. புதியதுணியில் உடைகள் தைப்பதற்குமுன்னர் அவற்றை நீரில் ஒரு தடவை நனைத்துக் காயவிட்டபின் தைத்தால் பின்னர் உடைகள் சுருங்கி அளவில்லாமல் போகும் நிலையைத் தடுக்கலாம்.

9. கம்பளிஉடைகள், சட்டைகளைக் கழுவமுன்னர் ஒரு காகிதத்தின்மேல் அவ்வுடையைப்போட்டு அதன் உருவ அளவைக் கீறிவைத்துக்கொள்க. பின் உடையைக் கழுவிக் காயவைத்து இலேசாக ஈரத்தன்மை இருக்கும் போது முன்னே கீறிய காகிதங்களின் மேல் போட்டு அவற்றின் அளவுக்கு மெதுவாக இழுத்துவிடல் வேண்டும். அப்படிச்செய்தால் உடைகள் கழுவிய பின்னரும் ஒரேயளவாக இருக்கும்.

—※—

## சமையல் அறையில் சுவிசேஷ உவமைகள்

அன்று ஞாயிறுவாரம். காய்கறிக் கிழவியிடம் பேரம்பேசிவாங்கிய புடோலையும, கோவாவையும் எடுத்துக் கொண்டு சமையலறையினுள் நுழைந்தாள் அம்மா. இன்றைக்கு நாங்களும் ஆளுக்கொரு வேலைசெய்கிறோம்எனக் கூறிக்கொண்டே அக்கா, அண்ணன், விமலா, ராஜியாவரும் உள்ளேபுகுந்தனர். அப்பாவும் சின்னப்பயல் கண்ணனுடன் வாராந்தாவிலுள்ள நாற்காலியில் அமர்ந்தார்.

மணி ஒருகட்டுவிறகுடன் உள்ளே நுழைந்தான். நற்கனிகொடாத மரங்களெல்லாம் வெட்டுண்டு அக்கினிக்குள் போடப்படும்என்ருரே யேசு, உண்மைதான. இதோ எங்கள்வளவில் பட்டுப்போய்நின்ற மாமரத்திலிருந்து வெட்டிக்கொண்டு வருகிறேன் என்றான். மரங்கட்காக மட்டும் கிறிஸ்து இதைச் சொலலவில்லை. நாங்களும் இவ்வுலகில் சீவித்து நல்லபுண்ணியங்களையும், நற்பேறுகளையும் விருத்திசெய்யாவிடில நடுத்தீர்வைநாளில் நாமும் யேசுவின் தூதரால் நாக அக்கினிக்குள் தள்ளப்படுவோம்என்ருர் அப்பா.

ராஜி தாளிதத்துக்காகக் கடுகைத் துப்புரவு செய்துகொண்டிருந்தாள். இவ்வளவு சிறிதாயிருக்கிறதே. ஒருகையளவில் ஆயிரம்கடுகாவது இருக்குமா? என்ெருரு பிரச்சினையைத் தூக்கிப் போட்டாள். உனக்கு வேலையில்லாவிடில் இருந்துஎண்ணிக்கொண்டிரேன் என்ருள் அம்மா. சென்றகிழமைதான் சுவிசேஷத்தில் படித்தோம். கடுகு சிறிதாயிருக்கிறது. ஆனுல், அது வளர்ந்து பெரியமரமாகி ஆகாயத்துப் பறவைகள் அதில் தங்கினஎன்று யேசு கூறுவதாக எழுதப்பட்டுள்ளது. இக்கடுகைத்தான் கிறிஸ்து மோட்சராச்சியத்துக்கு ஒப்பிடுகிருர். நமது சத்திய திருச்சபையும் இப்படித்தான், அப்போஸ்தலர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு இன்று உலகமடங்கிலும் ஏராளமான கிறிஸ்தவர்களைத் தன்னுளடக்கியிருக்கிறதுஎன்று விளக்கமளித்தான் அண்ணன்.

கறிக்கு உப்பு ருசிபார்த்த அம்மா, என்ன இது? எவ்வளவு உப்பைக் கொட்டினுலும் ருசியாயிருக்குதில்லை என்ருள் எரிச்சலுடன். இதைத்தானே கடையில் தருகிறுர்கள் [illegible] செய்யமுடியு[illegible] ஞன் மணி. யேசு இதற்கும் உவமை சொல்லுகிருர். உப்பானது உணவுக்கு ருசியைக் கொடுக்கிறது. அது சக்தியற்றுப்போனுல் அதைச சத்துள்ளதாக்க முடியுமஎன்று கூறப்படுகிறதே. கிறிஸ்தவர்கள் உலகுக்கு உப்பாயிருக்கிருர்கள். அவர்களே சிலசமயங்களில் தாறுமாருகப்போனுல் தாங்கள் கெட்டுப்போவது மாத்திரமல்ல தாம் வழிகாட்ட வேண்டியவர்கட்கும் அழிவையே தேடுகிருர்கள் என வருத்தப்பட்டாள் அம்மா.

கண்ணன் சமையலறையினுள் நுழைய முயன்றுகொண்டிருந்தான். அப்பா அவனைத் தடுத்துக்கொண்டிருந்தார். அம்மா, அவனை இங்கே வாவிடுங்கள், அவனுக்கு ஒருவாழைப்பழம வைத்திருக்கிறேன் என்ருள். எங்களுக்கு இல்லையா ? இவனுக்குத்தான் செல்லம்கூடஎன்று வயிறெரிந்தாள் விமலா. சிறுவர்களை நம்மிடம் வாவிடுங்கள் ; ஏனெனில், மோட்சஇராச்சியம் அவர்களுடையதுஎன யேசுக்கிறீஸ்துநாதரும் அவர்கள்பக்கமாகத்தானே கூறியிருக்கிருர் என்ருள் அம்மா. சிறுவர்கள் வஞ்சகமற்ற மனமுடையவர்கள். இவர்களைப்போல ஆகாவிடில் மோட்ச இராச்சியத்துள் பிரவேசிக்கமுடியாது என்று மேலுங் கூறுகிருரேஎன்ருள் அக்கா. ஆமாம், எவனொருவன் இச்சிறுவர்கட்கு இடறலாயிருக்கிருனே அவன்கழுத்தில் இயந்திரக்கல்லைக் கட்டிச்சமுத்திரத்தில்தள்ளுவது நலம் என்றுகூறி சிறுவர்கட்குத் துர்மாதிரிகை காட்டுவதைக் கண்டித்திருக்கிருரே நம்இறைவன்என வியாக்கியானம் செய்தார் அப்பா.

அம்மா அவசரமாக எண்ணெய் கொதிக்கிறது. சட்டியில் இருட்டாக இருக்கிறது. அப்பளம்பொரிக்க அந்தக் கைவிளக்கைக் கொழுத்திக் கொண்டுவா என்ருள். விமலா ஓடிப் போய்க் கொழுத்திவந்தாள், எண்ணெய் இல்லாததால் திரிகருகி விளக்கு தூர்ந்துவிட்டது. அவசரப்பட்டு எண்ணெய்ஊற்றிக் கொழுத்திவந்தாள் விமலா. இதற்கிடையில போட்ட அப்பளங்கள் கருகிப்போய்விட்டன. இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த அப்பா பத்துக்கன்னியர்களின் உவமை போல இருக்கிறதே என்ருர். ஆமாம் ஐந்துபுத்தியற்ற கன்னியரும் நேரகாலத்துடன் விளக்கை ஆயத்தமாக வைத்திருக்கவில்லை. மணமகன் வந்தபோது அவர்களின் விளக்குகள் நூர்ந்துவிட்டன. அக்கன்னியர்கள் எண்ணெய் வாங்கப்போனபோது மணமகன் புத்தியுள்ள கன்னியர்களுடன் மோட்ச இராச்சியத்துள் பிரவேசித்துவிட்டார். அவர்கள் வெறுங்கையுடன் திரும்ப வேண்டியதாயிற்று என்ருர். இன்று எங்கள்வீட்டில் எண்ணெய்விளக்கில்லாத காரணத்தால அப்பளமின்றியே புசிக்கவேண்டியதாயிற்று என்ருன் மணி.

அமமா உணவு பரிமாறினுள். அனைவரும் அருந்த ஆரம்பித்தனர். நானும் வந்துவிட்டேன், சரியான நேரத்துக்கு என்றவண்ணம் உள்ளே நுழைந்தார் மாமா. ஓ நாங்கள் இவ்வளவுநேரமும் வேலைசெய்து களைத்துப்போய்ச் சாப்பிட இருக்கிருேம். இவர் வேலைசெய்யாமல் சாப்பிடவந்துவிட்டார்என அழகு காட்டினுள் ராஜி. உன்னுடைய சோற்றை மாமாவுக்கு கொடுக்கமாட்டோம் பயப்படாதே என்ருன் மணி. திராட்சைத்தோட்டத்து உவமையை நீங்கள் கேட்டதில்லையா? ஒன்பதாம் மணியில் வேலைசெய்யவந்தவர்க்கும், பத்தாம் பன்னிரண்டாம் மணியில்வந்தவர்க்கும், கடைசியில் வந்தவர்க்கும்கூட தலைவன் ஒரே கூலியைக் கொடுத்தபோது முன்னேவந்தவர்கள் முணுமுணுத்தார்களே. ஆனுல், தலைவன் அவரவர்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## சேனையும் சேவையும்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டது என்று சொல்லுகிறேன், அப்பொழுது உங்களுக்குக் கண்திறக்கும் என்று நம்புகிறேன். எங்களூர் ஞானப்பா 10, 15 வருடங்களாகக் கோவிலும் இல்லை ; குருவும் இல்லை என்று நாத்திகம் பேசித் திரிந்தார். சேனையாட்கள் ஒருவருடமாக அவருக்குப் புத்திசொல்லி வந்தார்கள். அவர் முடியாது என்று சொல்லிவிட்டார். கடைசியாகச் சேனையாளரின் ஆயுதமாகப் புதுமை வரவணிக்கத்தை அவருக்குக் கட்டக்கொடுத்தார்கள். மரியாயின் புதுமையைப் பாருங்கள். ஒரு கிழமைக்குள் ஞானப்பா ஞானம் பெற்று குருவானவரைக் கெஞ்சிக் கேட்டுக் கடைசித் தேவதிரவிய அனுமானங்களைப்பெற்றுப் பாக்கியமாக மரிக்கவில்லையா? கந்தசாமியும் மனைவியும் ஏதோ காணிப்பிணக்கில் பரிசுகெட்டதை ஊரறியும். ஐந்துவருடமாகக் குடும்பமும் ஐந்துபிள்ளைகளும் சீர்குலைந்து கிடந்ததைக் கண்ட சேனையாளர் ஆறுமாதமாகப் பாடுபட்டு மச்சானுடைய வழக்கையும் சமாதானமாகத் தீர்த்துவைத்து மூத்தபிள்ளையையும் படிக்கவைக்க ஒழுங்குசெய்தது சேனையாற்ருன் என்று செல்வத்துக்குத் தெரியுமே, மாவடிச் செபமாலை வைத்தியசாலையில் தீராதபிணியிற் கிடந்து உதவியின்றி அவஸ்தைப்பட்டபோது சேனையாளர் அடிக்கடி சந்தித்து ஆறுதல்கூறி அவரைக் காப்பாற்றவில்லையா? அவர் இரண்டுமுறை சேனையாளரைப் பேசிஏசிக் காறித் துப்பியும் இருக்கிருர். எவ்வளவு பொறுமையாகச் சேனையாளர் சேவை செய்தனர். இப்படி எத்தனையை அடுக்கிக்கொண்டு போகலாம். ஏன்? உங்கள் விளையாட்டுக்கழகத்தில் போன வருடம் வந்த சண்டையைச் சமா[illegible]யார்? சேனையாளர் [illegible]

குமார் : சேனையைப்பற்றிக் கத்தோலிக்கரும் நன்ருய் அறியவில்லை. உண்மையில் எவ்வளவோ தர்மம் செய்கிறது. நாங்கள் உலகத்திலேயே கண்ணும் கருத்தாயிருக்கச் சேனை தேவனின் அலுவலகளில் ஊழியம் செய்வது புகழ்ச்சிக்குரியதே.

சுவாந்தா: நன்ருய்ச் சொன்னுய் குமார். உன் வாயில் சீனி போட வேண்டும். உண்மையை அறியாமல் சேனையாளரில் அரசாங்கமும் பழி சுமத்துகிறது. தூய்மை— சகோதாத்துவம்— சமாதானம் என்பவையே சேனையின் இலட்சியம். பங்குக்குருவானவருக்கு அமைந்து அவருடைய நல்ல காரியங்களில் துணைபுரிவதும் அவரோடு கத்தோலிக்கரை ஐக்கியப் படுத்துவதுமே சேனையாளரின் ஏக நோக்கம். வேறு யாதும் இல்லை.

துரை : உண்மை விளங்கியது. மடுவால் திரும்பியதும் கட்டாயம் மரியாயின்சேனையிற் சேர்வேன்.

ரெத்தினம்: இல்லறத்தார் யேசுவுக்குச் சேவைசெய்ய ஏற்ற சபையென்பதை அப்பா விளக்கிக் காட்டினுர். நானும் நிச்சயமாகச் சேர்ந்து உழைப்பேன்.

மணியம்: மரியாயின் சேனையென்ருல் தர்மவான்களின் சபையென்றதை எல்லாரும் நம்பித்தாகை வேண்டும். அதனுல ஊர் சிறக்கும்.

செல்வம்: மதவாச்சி வந்துவிட்டது அப்பா சாப்பிடுவோம்.

சுவாந்தர் : நல்லது சாப்பிடுகிறேன். மடுவுமாதாவே உமது கிருபையை வேண்டுகிருேம். மரியாயே வாழ்க. மன்னுர்க்கோச்சி 2 மணிக்குத்தான் வரும். சற்று இறங்கி ஆறுவோம் வாருங்கள்.

* * *

[இடவசதியின்மையால் இக்கட்டுரை காலந்தாழ்த்திப் பிரசுரிக்க நேர்ந்ததையிட்டு வருந்துகிருேம்]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மனை மாட்சி

“இதோ நெல்லிரசம்வாங்கி வந்திருக்கிறேன்” என்ருர் தூயஆசீர்வாதப்பர் கல்லூரியின் ‘பெஞேராமா” என்ற களியாட்டவிழாவில் இருந்துவந்த அம்மா. “களியாட்டவிழாவில் மேற்படி கல்லூரியின் யாழ்ப்பாணத் தமிழாசிரியர்கள் யாழ்ப்பாண விற்பனவு நிலையமொன்றைநிறுவி யாழ்ப்பாணத்திலுள்ள உற்பத்திப்பொருட்கள் பலவற்றைக் கொழும்பிலுள்ளவர்களுக்கு அறிமுகஞ் செய்திருக்கிருர்கள். அவற்றில் தோலகட்டி ஆச்சிரமத்தில் செய்யப்படும் பலபொருட்கள் இருந்தன. “நெல்லிரசத்துக்கு நல்ல கிராக்கி,” என அம்மா மேலுஞ் சொன்ஞர். “தோலகட்டி ஆச்சிரமம் என்றுலென்ன? அது என்ன ஒரு கைத்தொழிற்சாலையா?” என்று தங்கை புஷ்பா கேட்டாள். “யாழ்ப்பாணக் குடாநாட்டில் அச்சுவேலிக்குக் கிட்டத் தோலகட்டி என்னும் கிராமத்தில், சமீபத்தில் தாம் குருவாகிப் பொன்விழாவைக் கொண்டாடிய வண. தோமஸ் அடிகள், செபமாலைத்தாசர் சபை எனப்படும் துறவிகள் ஆச்சிரமம் ஒன்றை நிறுவியுள்ளார். இத்துறவிகள் கார்த்தூசியன், கார்மேல் முதலிய சபைகளின் துறவிகளைப்போல மௌனவிரதங் காப்பவர்கள். செபத்திஞலும் தபத்திஞலும் இறைவனின் அருளை வேண்டி வருகிருர்கள். அதுதான் தோலகட்டி ஆச்சிரமம். விடுமுறைக்கு யாழ்ப்பாணம் போகும்போது உங்களையெல்லாம் அங்கு அழைத்துச் செல்கின்றேன்” என்ருர் அப்பா. “ஆச்சிரமத்தில் ஏன் நெல்லிரசம் செய்கின்றனர்?” என்று கேட்டான் நாதன். “ஆச்சிரமத்தில் துறவிகள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள வேலைசெய்யவேண்டாமா? இத்துறவிகள் கமத்தொழிலையும் சில கைத்தொழிலையும் செய்கிருர்கள். அவர்கள் செய்யுங் கைத்தொழில்களுள் நெல்லிரசம் போன்ற பானவகைகள் செய்தலுமொன்று” என்ருர் அப்பா. “தோலகட்டித் துறவிகளைப்பற்றிப் பேசும் இந்நேரத்தில் எங்களுடைய கல்லூரியை நடத்துவிக்கும் கிறிஸ்தியன் விறதர்மாரின் நினைவுண்டாகிறது. அப்பா நீங்கள் எங்கள் அதிசிரேஷ்டர் இலங்கைக்கு வந்திருப்பதை அறிவீர்கள்தானே,” என்ருன் நாதன். “பத்திரிகைகளில் வாசித்தேன். கிறிஸ்தியன் விறதர்மார் சபையைத் தூய டிலாசால அருளப்பர் அடியிட்டார். இச்சபை அகில உலகிலும் பரவியிருக்கிறது. இச்சபையில் சுமார் 30,000 துறவிகளுண்டு ஆயிரத்துக்கு மேற்பட்ட பாடசாலைகளை நடாத்துகிருர்கள். நமது இலங்கையில் பத்துப் பாடசாலைகளில் அவர்கள் பணிபுரிகின்ருர்கள். கொட்டாஞ்சேனையிலுள்ள புனித ஆசீர்வாதப்பர் கல்லூரியைக் கையேற்றுத் 95 ஆண்டுகளாகின்றன,” என்ருர் அப்பா. “அப்படியாயின் 1967ஆம ஆண்டில் நூற்ருண்டு நிறைவுவிழாக் கொண்டாடுவார்களா?” என இரத்தினம் கேட்டான். “இறைவன் அருள் இருந்தால் அந்தப் பாக்கியம் எமக்குக் கிடைக்கும். தூய ஆசீர்வாதப்பர் கல்லூரி பல பெரியோர்களை நமக்கு அளித்துள்ளது. யாழ்ப்பாணத்து மேற்றிராணியாராகிய மேன்மைதங்கிய எமிலியானுஸ் பிள்ளை ஆண்டகையவர்களை உருவாக்கியது இக்கல்லூரிதான்” எனப் பெரியண்ணன கூறிஞர். “வத்திக்கானில் நடக்கவிருக்கும் மகாநாட்டுக்கு எமிலியானுஸ் பிள்ளை ஆண்டவர் அவர்கள் போவாரா?” என அக்கா கேட்டாள். “ஏன் இலங்கையிலுள்ள அத்தனை மேற்றிராணிமாரும் போகிருர்கள்” என அத்தார் விடையிறுத்தார். “இத்திருச்சங்கத்துக்காகத்தானே அப்பா நாங்கள் நாள்தோறும் செபம்பண்ணி வருகிறோம்” என்ருள் தங்கை. ஆம். யேசுநாதர் திருச்சபைக்குத் தலைவராய் அர்ச். இராயப்பரை நியமித்தபோது அவரைத் தொடர்ந்து வருகிற பாப்பாசர்களும் திருச்சபையின் தலைவர்கள் ஆகிருர்கள். நாங்கள் திருச்சபைஎன்னும் குடும்பத்தின் உறுப்புகளாயிருப்பதால் பாப்பரசரின் விருப்பப்படி இச்சங்கம் செவ்வனே நிறைவேறச் செபம்செய்ய வேண்டும். திருச்சங்கம் நெருங்க நெருங்க எங்கள் செபமுயற்சிகளையும் கூட்டிக்கொள்ளவேண்டும்” என்ருர் அப்பா. “பாப்பு என்ருல் கருத்தென்ன?” என்று தங்கை கேட்டாள். “பாப்பு என்னுஞ் சொலலுக்குப் பொருள் பப்பா, அப்பா, தந்தை பிதா என்பதுதான்.” என்று அப்பா, சொன்ஞர். “உண்மையில் இப்பொழுதுள்ள பாப்பரசர் அருளப்பர் எல்லா வகையிலும் ஒரு பப்பாதான்” என அம்மா அன்போடு சொன்ஞ.

“மறைவேந்தன்”

## பல்கலை வல்லுனர்
# லியனடோ டாவின்சி

இத்தாலி தேசத்தவரான பெயர்போன சித்திரக்காரர்தான் லியனடோ டாவின்சி. இவர் சித்திரக்கலையில் மாத்திரமன்று, ஆனல், வேறுகலைகளிலும் சிறந்துவிளங்கிஞர். இவர் இற்றைக்கு 510 ஆண்டுகளுக்குமுன் அதாவது 1452-ல் இத்தாலியிலபிறந்தவர். நீங்கள் எலலோரும் கடைசி இராப்போசனத்தின் படங்களைப்பார்த்திருப்பீர்கள். இப்படத்தை வரைந்தவர்தான் லியனடோ டாவின்சி.

இத்தாலியில்இருந்த ஒரு பிரபுவின் வீட்டில் சேவைசெய்வதற்காக ஓர் இளைஞன் விண்ணப்பம் செய்திருந்தான். அவன் தனது விண்ணப்பத்தில், தான் ஓர் ஆராய்ச்சியாளன் என்றும், ஒரு சிற்பாச்சாரி என்றும், சிறந்தமேசன் என்றும், பொறிஇயல் வல்லுனன் என்றும் தனது திறமைகளைக் குறிப்பிட்டிருந்தான். தான் சித்திரம்வரையக்கூடுமென்றும், வேறு என்னவேலையாயினும் செய்யத்தயார் என்றும் எழுதியிருந்தான். அக்கடிதத்தில் லியனடோ டாவின்சி என்று கையெழுத்திடப்பட்டிருந்தது.

இத்தகைய இலட்சணங்களுடைய இளைஞனைத் தனது அரண்மனையில் அமர்த்துவதற்கு மிகவும் விருப்பமுடையவராய் இருந்தார் பிரபு. உடனே தனது அரண்மனைக்கு வரும்படி அவனை அழைத்துத் தனது சேவையில் அமர்த்திக்கொண்டார்.

சிலகாலத்தின்பின் ஒருநாள் மிலான் நகரிலுள்ள ஒரு சந்நியாசமடச் சுவரில் கடைசிஇராப்போசனத்தைச் சித்திரிக்கும் படத்தைவரையும்படி டாவின்சிக்கு உத்தரவிட்டார் பிரபு. இப்படத்தை வரைந்துமுடித்ததும் டாவின்சியின் சித்திரத்திறமையை எல்லோரும்வியந்தனர். மற்றச்சித்திரக்காரரைவிடத் திறமாகவரையும் ஆற்றலை அவரிடம் கண்டனர். கடைசிஇராப்போசனப்படம்தான் இதுவரை வரையப்பட்ட அந்நிகழ்ச்சிபற்றிய படங்களில் உண்மையான அமைப்பைப் பெற்றுளது என்று இன்றும் பலர் புகழ்கின்றனர். என் நாமே அதை அறிவோம். லியனடோ டாவின்சி வரைந்த இப்படமானது உலகப்புகழ் பெற்ற ஒரு சித்திரமாக மதிப்பிடப்படுகிறது. லியனடோ டாவின்சி வரைந்த சித்திரங்களில் ஸ்நாபக அருளப்பரின் படமும் பிரசித்திபெற்றது.

லியனடோ ஒரு ஓவியக்காரனுக மாத்திரம் திகழவில்லை. தான்வேலைக்கு விண்ணப்பம் செய்தபொழுது குறிப்பிட்ட அத்தனைகலைகளிலும் சிறந்தவர், ஈடுபாடுடையவர் என்பதைச் செய்துகாட்டி உண்மைப்படுத்திஞர். அவர் இன்று நாம் காணும் ஹெலிகொப்ரர் விமானத்தின்மாதிரி உருவத்தை அன்றே செய்துவிட்டார். நீர்மூழ்கி செய்யவும், சுழியோடும் மணியை இயக்கவும் திட்டமிட்டிருந்தார். ஆம் சுமார் 500 ஆண்டுகளுக்குமுன்பே இப்பரிசோதனைகளில் அவர் ஈடுபட்டிருந்தார்.

இதுமட்டுமா அவர் பெரியகட்டிட நிர்மாணி. மிலான் நகரைச்சுற்றி அழகுகொழிக்கும் மாளிகைகளுக்கும், பொதுசன கட்டிடங்களுக்கும் படம் வரைந்து கொடுத்தார். சலவைக்கல்லிலே அழகியஉருவங்களை, சிலைகளைச் செதுக்கிஞர். மிலான் நகரத்தில் வாய்க்கால்களையும், வடிகால்களையும் அமைத்துக்கொடுத்தார்.

லியனடோ ஒரு இசைவல்லுனராகவும் திகழ்ந்தார். ஓய்வுநேரங்களை வானஆராய்ச்சியிலும் செலவிட்டார். பலகாரியங்களைத்திறமையாகச்செய்யும் ஆற்றல் அவருக்கிருந்தது. உலகில் இப்பேற்பட்டதிறமை மிகவும்சொற்பப் பேருக்கேஉண்டு. உண்மையில் அப்படித்திறமையுடையவர்களில் லியனடோ பெரியவர்என்றே கூறவேண்டும்.

எஸ். எம். ஜே.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 4209

சங்கானை
சுவாம்பிள்ளை ஆத்தஞசியார்
— வழக்காளி.

எதிராக

பிராம்பத்தை, சங்கானை

1. முருகேசு சின்னத்தம்பி

சங்கானை, கிழக்கு காலஞ்சென்ற சின்னத்தம்பி சிவரத்தினத்தின் ஆதனத்துக்குச் சட்டப்படி பிரதிநிதியான,

பிராம்பத்தை சங்கானை கிழக்கு.

2. சிவரத்தினம்

கைம்பெண் அன்னப்பிள்ளை
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M.B. 4209-ம். இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்ஞல் விபரிக்கப்படும் இரு ஆண்டுக்காணிகள் 1962-ம்ஆண்டு ஆவணிமீ 29-ம் திகதி (29-8-62) புதன்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தந்தக் காணிகளுள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல்வட்டி ரூபா 2297-ம், இதற்குத் தீர்வை ரூபா 1,500-க்கு 23-8-61 திகதிதொடக்கம், 16-2-62வரை 100-க்குப் 12வீத வட்டியையும், பின் முழுத்தொகையும் இறுபடும்வரைக்கும் 5 வீதவட்டியும், கோட்டுச்செலவு ரூ. 258-90சதம்.

## காணிகளின் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணமடிஸ்திறிக், பண்டத்தெருப்புக்கோயிற்பற்று, பண்டத்தெருப்புஇறை “புத்தறியலுடை” பரப்பு நெல்லுஇலாச்சம் 12. இதற்கு எல்லை: கிழக்கு—முருகேசு கந்தையாவுக்கும், கந்தையா நாகேந்திரத்துக்குமுரிய ஆதனம். வடக்கு — கந்தர் தம்பையாவின் ஆதனம் மேற்கு — கந்தர் செல்லத்துரையின் ஆதனம். தெற்கு—வைரமுத்து கைம்பெண் சிதம்பரத்துக்கும், அருணசலம் கைம்பெண் வள்ளியம்மைக்கும் உரிய ஆதனம். கிணற்றில் பங்கும், வழிவாய்க்கால் பாவிப்புரித்தும். இதில் சொரியலாய் $\frac{3}{4}$ பங்கும்.

2. மேற்படி “புத்தறியலுடை” பரப்புநெல்லுஇலாச்சம் $9\frac{1}{2}$யும், கிணறும். இதற்கு எல்லை: கிழக்கு—பெரியார் முருகேசுவுக்குரிய ஆதனம். வடக்கு—வைரவி முருகேசுவின் ஆதனம். மேற்கு—முருகேசு சின்னையாவின் ஆதனமும், தண்ணீர் வாய்க்காலும். தெற்கு—அந்தோனிப்பிள்ளை லோறன்சின் உரித்தாளருக்குரிய ஆதனம். கிணற்றில் தண்ணீர்ப் பங்கும், வழிவாய்க்காலும் மறுபங்காளருக்குப் புறநீங்கலாக.—இதில் சொரியலாய் அரைவாசிப்பங்கும்.

சி. செ. மாரிமுத்து,

கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
“விதானை வளவு,”
சித்தன்கேணி, 3-7-62.

## அர்ச். அந்தோனியாரின் தருமக்கோணம்

## சென் வின்சென்ற் டீ போல் தருமசபை

## யாழ்ப்பாணம்

### காணிக்கைகள்

ஓிரிபோருவாதோட்: அன்னம்மா 5-00. வற்ருப்பளை: செ. இம்மனுவேல் 3-00. கொற்ருன்றீவு: ஆர். எம். பி. பிள்ளை 19-00, திருமதி. ஆர். எம். பி. பிள்ளை 18-00. அக்கரபற்றனை: திருமதி எலிசபேத் யோண் 5-00, பருத்தித்துறை: ச. சவிரிமுத்து 10-00 பாஷையூர்: ஓர் ஆசிரியர் 5-00, செ. சவிரிமுத்து 2-00, ஓர் ஆசிரியர் 5-00. மன்ஞம்பூரி: வி.எம். ஜே. கந்தையா 4-00. கல்கமுவா: ஏ. கத்திரீஞள் 1-00, சி. மரியாம்பிள்ளை 2-50, தோ. ஜெட்ரூட்டம்மா 7-50, ஆ. யூவான்பிள்ளை 4-00. வ. சந்தியாப்பிள்ளை 6-00. உடப்பு: கே. எஸ். மேரி ஜெஸ்லீன் 1-00. குருஞகல்: ஜி. எஸ். சின்னத்துரை 3-00. சிங்கப்பூர்: எம். ஏ. பெஞ்சமீன் 20-00. செட்டிகுளம்: யோ. இராயப்பு 15-00, தே. வஸ்தியாம்பிள்ளை 10-00. முள்ளிக்குளம்: ம. தோமாஸ் 5-00, செ. நெவல்பிரவீஸ் 4-50, எஸ். லூக்காஸ் 2-00, அ. சந்தனம் குருஸ் 5-00. நீர்கொழும்பு: மிஸ்செஸ். ஏ அன் வில்லவருயர் 9-00, அலிஸ் மெலோ 3-00. கல்பிட்டி: எஸ். பி. நேனிஸ் 3-50. தலைமன்ஞர்: ஏ. சந்தியா டயஸ் 10-00, அ. ஆஸை டயஸ் 10-00, [illegible] 10-00, ஓர் அடியாள் 5-00. விடத்தல்தீவு: அ. மத்தேஸ் 10-00. இரணைதீவு: விருக்க் அன்ரன் 7-00. டிம

போடிரு: பி. எவ் ஞசைப்பிள்ளை 3-00. முல்லைத்தீவு: எஸ்.எம்.இளையதம்பி 6-00 நாவலியா: எவ். எம். வர்னவாஸ் 6-00. கம்பளை: திரு. ஏ. டி. சேவியர் 11-00. வெலிகமை: வி. வி. யோசவ 8-00. கொழும்பு: தோமாஸ் மோசேஸ் 20-00, க. அந்திரேஸ் 6-00. தலவாக்கொல: ஓர் உபகாரி 109-00. யாழ்ப்பாணம்: வி. ஞானப்பிரகாசம் 5-00, சுவக்கீம்பிள்ளை 5-00, திருமதி ஏ. பிரான்சீஸ் 3-00, எம் பிறகாசியம்மா 2-00, திருமதி லீனுஸ் 2-00, திருமதி போல் கிரேஸ் 2-00, யோ. மனவற்பிள்ளை மாகிறற் 1-00. யாழ். அடப்பன்ரேட்: எம். பிரகாசியம்மா 2-00, ரெம்பிள்ரேட்: ஓர் உபகாரி 2-00, சுண்டிக்குளி: ரி. றப்பியல் 3-00, கொழும்புத்துறை: எஸ். சவிரிமுத்து 3-00 பனுவில்லா: திருமதி ஈ விக்ரர் 2-00. மறிச்சுக்கட்டி: டி. டி. யோசவ் 2-00. வெகவென்றலான: ஏ. சஞ்சிவி 10-00. போளவத்தை: வ. தேக்கிலா 5-00. கிவொட்டா: ரி. மனுவேல் 4-00. கொஸ்லான்டு: எஸ். கே. எம். பிள்ளை 10-00. கன்ஞரோற்ற: பி. சின்னப்பன் 5-00. மன்ஞர்: சி ஏ. வி. பதமராஜா 3-00, திருமதி அரசரட்ணம் 2-00. எட்டியாந்தோட்டை: எம். ஆர். சந்தனம் 2-00.

ஆசிரியர்: ஆதாம் ஏன் ஓர் மனிதனுகச் சிருட்டிக்கப்பட்டார் என்று உங்களில் எவராவது சொல்வீர்களா?

சேகர்: (கையைஉயர்த்துகிருன்)

ஆசிரியர்: சரி, சொல்பார்க்கலாம்.

சேகர்: அவர் ஒரு குழந்தையாகச் சிருட்டிக்கப்பட்டிருந்தால் அவரை எடுத்து வளர்க்க ஆரும் இல்லையே சார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சத்தியமறைச் சல்லாபம்

# சேனையும் சேவையும்

துரை: இன்றைக்கு ஒரேசனம். கோச்சிப்பெட்டியில் நிற்கத் தரிக்க இடமில்லை. இம்முறை மடுக்கோவிலில் பெருங் கூட்டமாகத்தான் இருக்கும்.

செல்வம்: நேற்றே 40,000 பேரளவில் என்று தினகரனில் வாசித்தேன். மடுமாதாவின் கருணைக்குக் கரையில்லை. பக்தர்கள் கூட்டத்துக்கும் குறைவில்லைத்தானே.

சுவாந்தர்: ஓஹோ! ரெத்தினம் ஆடிப்பெருநாளுக்கா பயணம். மனைவி மக்கள் எங்கே? எப்படிச் சுகம்!

ரெத்தினம்: நாங்கள் விளையாட்டுக் கழகத்தார்கூடி மடுவுக்குப் போகிறோம். பத்துப்பேர் சேர்ந்து சலுகைக் கட்டணக்கணக்கில் யாத்திரை செய்கிறோம் அப்பா.

சுவாந்தர்: மரியாயின்சேனை இலங்கையில் தொடங்கிய 25 வருட யூபிலி ஞாபகமாக நான் மடுவுக்குச் செல்லுகிறேன். கொழும்பிலும் யூபிலிவிழா ஒன்று நடைபெறவிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் முதல் மரியாயின் சேனை தொடங்கும்போது நானும் சேர்ந்தேன். மாதா கிருபையால் இன்னும் அச்சேனையில் இருக்கிறேன்.

செல்வம்: மரியாயின்சேனை என்றாலே எனக்கு ஒரே வெறுப்பு. சேனை என்று கொஞ்சப்பேர் கூடிக்கொண்டு ஊராரைப்பற்றிக் கதைக்கிறதுதான் வேலை. சேனை என்னதான் செய்கிறது?

துரை: இதோ மணியம், குமார் கூட்டாளிகளும் எங்களுடன் இருக்கிறார்கள். சைவ ஆட்களுக்கு முன்னால் வேதத்தைப்பற்றி மரியாதையில்லாமற் பேசாதே செல்வம்.

சுவாந்தர்: அதைப்பற்றிக் குறையில்லை. அவர்களும் உண்மையை அறியட்டும். மரியாயின் சேனையென்றால் சேவைபுரியும் சபை. சபையில் என்ன நடக்கிறது என்றதை அறியாமல் அதைத் தூற்றித்திரிவது நல்லதல்ல தம்பி.

செல்வம்: நான் ஒரு கத்தோலிக்கன். அதற்காக உள்ள குறையை மூடி மறைத்துப் பாசாங்கு செய்ய என்னால் முடியாது. இந்தச் சேனையால் 25 வருடமும் என்ன ஆகிவிட்டது?

துரை: மச்சான் செல்வம், அப்பா எங்கள் பழைய சேனையாள். அவருடைய போதனை, சேவையெல்லாவற்றையும் கண்டு ஊரார் உபதேசியார் என்றும் அழைப்பர். மாதாவைத் தேடி யாத்திரை போகிற தருணத்தில் சற்றுப் பொறுமையாக இருந்து அவர் சொல்வதைக் கேட்போமே.

சுவாந்தர்: கத்தோலிக்கர் என்ற பெயரளவில் சீவிக்கிறவர்கள் எத்தனை பேர்? ஞாயிற்றுக்கிழமை வேதக்காரர் எத்தனை பேர்? இவர்களோடு வேதம் சீராகுமா என்று எண்ணிப்பாருங்கள். எங்கள் பரிசுத்தபிதா 11-ம் பத்திநாதர் இந்தக்காலத்தில் இல்லற அப்போஸ்தலர்தான் விசேடமாகத் தேவையென்கிறாரே. அவருடைய ஆசைக்கு மரியாயின்சேனை ஒரு வழிவகுக்கிறது. சேனையின் நோக்கம் என்ன? **அங்கத்தினர்களைச் சுத்திகரிப்பதே அதன் முதல் நோக்கம்.** அதற்குச் சேனை இரண்டு கடன்களை விதிக்கிறது. ஒன்று செபம்; மற்றது ஊழியம். கிறிஸ்துவின் இராச்சியத்தைப் பெருக்குவதற்கு மரியாளுடனும், திருச்சபையுடனும் ஞானமேய்ப்பரின் அதிகாரத்துள் கீழ்ப்பட்டு ஒத்துழைக்கும் ஊழியமே சேனை ஊழியம்.

செல்வம்: அதற்காக ஒவ்வொரு கிழமையும்கூடி ஏதோ குசுகுசுக்க வேண்டுமா என்றுதான் கேட்கிறேன்.

சுவாந்தர்: ஒவ்வொருகிழமையும் கூடுவது, கூடிச் செபிப்பதற்காகவே. அடுத்தது உலகம், சரீரம், பசாசு என்னும் மூன்று சத்துருக்களாலும் வரும் எதிர்ப்புக்களைச் சமாளிக்கக் குருவானவருடன்கூடி வழிவகைகளைத் தேடுகிறோம். செபத்தால் தேவ உதவியையும் ஆலோசனையால் அறிவும், பலமும் பெறுகிறோம். இதில் என்ன தவறு? சொந்தச் சுத்திகரத்தை அங்கத்தவர்கள் கவனிக்கவும், சருவேசுரனுடைய சேவைகளைச் செய்யும் வழிவகைகளை ஆலோசிக்கவும் வாரந்தோறும் கூடுவது சேனையாளரின் பிரதான கடமையாகும். கிழமைக்கு இரு மணித்தியாலப் பிரயாசை ஊழியம் அடுத்த கடமையாகும். கூடிச்சம்பாஷித்ததினால்தான் ஆதியில் மனிதர் நாகரிகத்தில் வளரத் தொடங்கினார்கள் என்று சரித்திரம் கூறும்.

மணி: நான் சைவன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். கத்தோலிக்கர் தனித்தனியே இவற்றைச் செய்யலாந்தானே. ஏன் சேனையென்று சேர்வான்? சேனையென்றால் இலங்கை அரசாங்கத்துக்கும் சந்தேகமும் பயமுமாகவிருக்காதா!

சுவாந்தர்: தம்பி, நீங்கள் ஏன் ஒரு கழகம் வைத்திருக்கிறீர்கள். தனியாளிலும் பார்க்க இன்று கூட்டுத்தாபனங்களால் பெருங்காரியங்களை இலகுவிற் சாதிக்கலாமல்லவா? இக்காலத்தத்துவமும் அதுதான். சோஷலிஸம் என்று பேசுகிறார்களே, அதுதான் இந்த முறை. எங்கள் திருச்சபையும் இல்லறத்தார் கூட்டமாகப் பலர் ஒன்றுசேர்ந்து சேவைசெய்ய வேண்டுமென்று ஆவலாயிருக்கிறது. "எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்" என்றது வீணான பழமொழியா? சேனை வேண்டுமென்பது நியாயந்தானே!

செல்வம்: கூட்டுநடவடிக்கைகளுக்கும் பெரும்பலம் உண்டுதான். அரசாங்கமும் ஒரு சபைதான். அரசாங்கக்கட்சியும் ஒரு சங்கந்தான். சமயங்களும் சபைகளினாற்றான் இயங்குகிறது. அது உண்மைதான். ஆனால், என்னுடைய கேள்வி சேனையாளர் எங்கள் ஊரில் என்னத்தைத்தான் சாதித்துவிட்டார்கள் என்பதுதான்...

சுவாந்தர்: சேனை சிறப்பாகக் கத்தோலிக்க சமூகத்துக்கும் பொதுவாக எல்லாச் சமூகத்தவருக்கும் வேண்டிய ஆன்ம சரீர உதவிகளில் ஈடுபடுகிறது. மரியாளைத் தலைமையாக வைத்துச் சேவை நடைபெறுவதால் மரியாயின் சேனையென்று பெயர். வீரமும், வெற்றியும் கொண்ட உரோமச் சேனையின் ஒவ்வொரு பிரிவுக்கும் "லீஜன்" என்று பெயரிட்டதுபோல் எங்கள் சபையும் வீரத்தோடும், வெற்றியோடும் சேவைபுரிய வேண்டுமென்று இதற்கும் 'லீஜன்' அதாவது சேனையென்று பெயரிடப்பட்டது. சேனை சேவையில் தங்கியிருக்கிறது. உண்மையான சேவைக்கு அன்பும் தியாகமும் வேண்டும். அவற்றின் குறைவால் நம்மிடையே சேவையும் குறைவு என்று ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்.

துரை: இந்தச் சிறிய ஊருக்குள் என்னவேலைதான் இருக்கிறது என்று எனக்கும் விளங்கவில்லை அப்பா.

சுவாந்தர்: சேவை செய்ய ஆவல் கொண்டு மரியாயின் தலைமையில் ஒன்றுகூடியவர்கள் முதல் தம்மைப் பரிசுத்தப்படுத்தச் சேனை உதவி புரிகிறது. பின்னர் அவர்கள் சமூகத்துக்குள் இருக்கும் புளிகாரமாயும், வெளிச்சமாயும் மாறுவார்கள். அதனால் தேச சமூகஐக்கியத்தை வளர்க்க முயற்சிப்பார்கள். இப்படியாகத் தேவனின் சத்துருக்களுடன் போராடுவார்கள். அரசாங்கத்துக்கும் அவர்களுக்கும் ஒரு தொடர்பும் இல்லை. அரசாங்கத்துக்கு உதவியாக ஒழுக்கத்துக்கும், அமைதிக்குமே தம் சமய உண்மைகளுள் முயற்சிப்பார்கள். இவற்றையெல்லாம் சேனையால் அன்றி வேறு யாரால் சாதிக்கமுடியும்.

துரை: வவுனியா வந்துவிட்டது போல.

குமார்: வவுனியாதான். மதவாச்சியில் சாப்பாட்டை வைப்போம், அப்பாவும் எங்களுடன் சாப்பிடுங்கள்.

ரெத்தினம்: ஆம் அப்பா, எங்களுடன் சேருங்கள்.

செல்வம்: அப்பா வேதாந்தம் பேசுகிறார் ஒழிய, சேனை என்னத்தைச் சாதித்துவிட்டது என்றதற்கு மறுமொழி இல்லை.

சுவாந்தர்: சரி தம்பிமார். சேனை ஊரில் உருப்படியாக என்ன செய்து

(தொடர்ச்சி 6-ம்பக்கம்)

# பேசும் பேனா

### புனிதர்களின் அணிவகுப்பு:

ஒருபுனிதை மேடையில் தோன்றினாள். யார் இந்தக் கன்னியெனச் சிந்தித்தேன். சபையில் ஒரே ஆரவாரம். ஒருமாதிரியாக அவள்தான் அர்ச். கிளாராளெனக்கண்டுபிடித்தோம். பின்னர் வந்தவர் கழுதையுடன்காணப்பட்டார். இவர்தான் அந்தோனியார் என மக்கள் கூச்சலிட்டனர். இப்படியே இமல்டா, பத்தாம் பத்திநாதர் முதலிய புனிதர்களும் ஒவ்வொருவராகக் காட்சியளித்தனர். ஆங்கிலநாடுகளிலே அழகிகளைத் தெரிவதற்காக அலங்காரிகளின் அணிவகுப்புகளை நடாத்துவார்கள். அதுபோலவே, நடைபெற்றது இப்புனிதர்களின் அணிவகுப்பும். பின்னர்தான் இந்த அர்ச்சியசிஷ்டர்கள் தேவநற்கருணையுடன் ஏதோஒருவிதத்தில நெருங்கிய சம்பந்தம் கொண்டவர்கள் என அறியக் கூடியதாயிற்று.

சில்லாலையில் அண்மையில் நடைபெற்ற சற்பிரசாத சல்லாபம் என்ற நிகழ்ச்சியின் ஆரம்பத்தில்தான் யான் மேற்கூறிய புனிதர்களின் அணிவகுப்பு இடம்பெற்றது. பின்னர் முதற்சற்பிரசாதத்துக்குஆயத்தம்செய்யும் சிறாருக்கும், மற்றையோருக்குமிடையே நடைபெற்ற சல்லாபமும் இடையிடையே தேவநற்கருணையின்பேரில் இன்னிசைக் கீதங்களும், நற்கருணைநாதரின் மேல் உண்மையான பக்தியருட்சியைக் கிளப்பிவிட்டிருக்குமென்பதில் ஐயமில்லை. இச்சல்லாபத்தை நம் யாழ்நகரின் பலபாகங்களிலும் நடாத்த முனைதல் அதிக பயன்தரும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

### பழி சுமத்தவேண்டும்:

நாட்டில் குழப்பங்களும், அராஜகங்களும் அதிகமாக இடம்பெறுகின்றன. யாரையாவது குற்றம்சாட்டவேண்டியது எங்கள் கடமை. ஏன் திருச்சபையின்மேல் குற்றம்சாட்டக் கூடாது? எனக் கார்மலாயிட்ஸ் திரைப்படத்தில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் கூறும் வசனமொன்று வருகிறது. இத்திரைப்படத்தைப் பார்வையிட்ட கத்தோலிக்கரல்லாத உயர்தர அதிகாரியொருவர், இன்று இலங்கையில் எடுத்ததற்கெல்லாம் கத்தோலிக்கர்கள் மேல் பழிசுமத்துவதுபற்றிப் பேசுகையில் மேற்கூறிய வசனத்தை எடுத்துக் காட்டினார். இலங்கையின் இன்றைய நிலைமைக்கு ஏற்ற திரைப்படம்எனவும் அவர் இப்படத்தைப் பாராட்டினார்.

### கிறிஸ்துவின் வருகை:

புதிய புதிய திரைப்படங்கள் அடிக்கடி யாழ்ப்பாணநகரின் படமாளிகைகளில் திரையிடப்படுகின்றன. அத்திரைப்படங்களில் நவீனமுறையில் கதைகள், சரித்திரவரலாறுகள் என்றெல்லாம் அமைவதால், தமக்குத் தெரிந்திராத அச்சரித்திரங்களைப் பார்த்து மகிழ, மக்கட்கூட்டம் படமாளிகைகளை முற்றுகையிடுகிறது. நம்மெல்லோருக்கும் தெரிந்தகதையொன்றுண்டு. பலவருடங்களாகச் சொல்லப்பட்டுவரும் கதை அது. கிறிஸ்து பிறந்த வரலாறும் அவர் நிகழ்த்திய பிரசங்கங்களும், புதுமைகளும் கடைசியில் அவரதுபாடுகளும் சேர்ந்தகதை எல்லோராலும் அறியப்பட்டவொன்று.

அண்மையில் யாழ்நகரின் பலபாகங்களிலும் பதினாறு மில்லிமீற்றர் அளவிலமைந்த கிறிஸ்துவின்வருகை என்ற திரைப்படம் ஆர்வமிக்க இளங்குரவரொருவரின் முயற்சியால் திரையிடப்பட்டுவருவதை அறிந்தேன். ஒருகாட்சிக்கு யானும் சென்றிருந்தேன். பிரபல கோமாளி சார்ளி சப்ளின் நடிக்கும் விகடச்சித்திரமொன்று முதலில் திரையிடப்பட்டுச் சிறியாரையும், பெரியாரையும் களிப்பிலாழ்த்தியது. தொடர்ந்து கிறிஸ்துவின்வருகை திரையிடப்பட்டது. தமிழில் விளக்கமும் தரப்பட்டது. ஏராளமான மக்கள் வெகு அமைதியாக இக்காட்சியைக் கண்டுகளித்தனர். கிறிஸ்துவின் பாடுகளைத் தத்ரூபமாகக்காட்டும் இக்காட்சியில் கற்றூணில்கட்டுண்டு அடிபட்ட காட்சி காண்போரனைவரையும் கண்ணீர் உகுக்கவைக்கும்வண்ணம்விளங்குகிறது என்பதையும் இங்கு தெரிவிக்க ஆசிக்கிறேன்.

### மரியாயின்சேனைக் கேள்விச்சரம்:

சென்றவாரம் வெளியிடப்பட்ட மரியாயின் சேனை யூபிலிவிழாச் சிறப்பிதழ்பற்றிப் பலபாராட்டுரைகள் கிடைக்கப்பெற்றார் எங்கள்பத்திராதிபர். சிறப்பிதழ் வெளியாகியதால் பாதுகாவலன் பிரதிகட்குத் தட்டுப்பாடும் ஏற்பட்டுவிட்டது. மிகக்குறுகிய காலத்தில் தயாரித்தளிக்கப்பட்ட சிறப்பிதழில சில தவறுதல்களும் ஏற்பட்டுவிட்டன. அவற்றுள் ஒன்று மரியாயின்சேனைக் கேள்விச்சரத்தின் முடிவுதேதியைப் பற்றியது. நேயர்கள் இக்கேள்விச்சரத்துக்கான விடைகளை 8-8-62வரை அனுப்பிவைக்கலாமென்பதைக் குறித்துக்கொள்ளவும்.

### மலேசியா:

மலேசியா என்றால் என்ன? அது ஒரு வியாதியின் பெயரா, அல்லது புதுவித உணவா எனப் பலர் வினவக்கூடும். மலாயா, சிங்கப்பூர் மற்றும் சிலநாடுகளை இணைத்துச் சமஷ்டி ஆட்சியொன்றை ஏற்படுத்தி அப்புதிய சமஷ்டிக்கு மலேசியா எனப்பெயரிட முடிவுசெய்துள்ளனர்.

இவ்வாரத்தில் யாழ்நகருக்கு விஜயம்செய்திருக்கும் கோலாலம்பூர் மேற்றிராணியார் வேந்தர்கோன் ஆண்டகையவர்களுடன் சில நிமிடங்கள் பேசும்பாக்கியம் எனக்குக் கிடைத்தபோது, மலேசியாவைப்பற்றி ஆண்டவரவர்கள் அரிய விளக்கம்தந்தார். பொருளாதார அபிவிர்த்திக்கும், எதிரிகளிடமிருந்து பாதுகாப்புப்பெறுவதற்கும் இவ்வித கூட்டாட்சிமுறை நல்லது என்பதை விளக்கினார். வத்திக்கான் பொதுச்சங்கத்துக்காக உரோமைநகர் செல்லும்வழியில் ஆண்டவரவர்கள் யாழ்ப்பாணத்தில்தமது உறவினருடன் சிலதினங்களைக் கழிப்பார்.

சிங்கப்பூரில் வாழ்க்கைச் செலவுப் புள்ளிகள் மிக அதிகமெனவும், பொருட்கள் மிக விலையாயிருப்பினும் அதிக வேதனம் கொடுக்கப்படுவதால் நிலைமை சமாளிக்கப்படுகிறதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Sunday August 5-1962

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




By Courtesy of The Catholic Teacher, England.

மலர் 1 இதழ் 7

# புனித ஒலி

ஆடி—1962

# ஆசிரியர் குறிப்புரை

## நற்செய்தி

'புனித ஒலி' தோன்றி இன்று ஆறு மாதங்களாயின. எதிர்பார்த்ததற்கு மேலான முறையில் வரவேற்புக் கிடைத்திருக்கிறது. அதற்கு எமது நன்றி, தேவனுக்கு வணக்கம். இதுவரையும் யாழ்ப்பாணக் குடாநாட்டை விட்டு இது வெளிச்செல்லவில்லை. 'புனித ஒலி' தமக்குக் கிடைக்கவில்லையே என வெளிப்பகுதிகளிலிருக்கும் பலர் குறை கூறியிருக்கின்றனர். இக்குறையை நீக்க ஒழுங்குசெய்யப்பட்டிருக்கிறது. இனிமேல் ஒவ்வொரு மாத இறுதிவாரத்தில் வெளிவரும் ஒவ்வொரு 'காவலன்' பிரதியுடனும் 'புனித ஒலி'யைக் கண்டுகொள்ளவும். யாழ்ப்பாணத்திற்கு வெளியே இருக்கும் கத்தோலிக்கருக்கு இது ஒரு நற்செய்தியாகும்.

## ஏமாறுதீர்!

'புனித ஒலி'யில் நவீன செய்தித்தாள்களின் அம்சங்களை நீர் காணத்தவறின் ஏமாந்துவிடவேண்டாம். இது ஒரு சாதாரண செய்தித்தாள் அல்ல. சமய செய்தித்தாளுமல்ல. பல புதிய உகந்த அம்சங்கள் புத்தியைப் புகட்டுவனவாயும், மகிழ்ச்சியைக் கொடுப்பனவாயும் காவலனில் தோன்றி வருகின்றன. 'புனித ஒலி'யும் அத்துறைகளிலேயே இறங்குமாயின் நோக்கத்திலே தவறுவதுமன்றி, அலுப்புக் கொடுக்கவும் தொடங்கிவிடும். ஆகவே, இதில் நீர் எதிர்பார்க்கக்கூடியது என்ன? "ஆற்றுப்படுத்தல்" என்னும் தொழிலையே நீர் எதிர்பார்க்கலாம். அது சருவேசுரன்பால் எம்மையும், பிறரையும் வழிப்படுத்தும் தொழிலாகும். நாம் எல்லோரும் இத்தொழிலில் அக்கறை உடையவர்களாய் இருக்க வேண்டுமல்லவா? இல்லறத் தொண்டர் சேவை ஒருசிலருக்கு மட்டுமன்று. அது நன்மனமுள்ள சகல கத்தோலிக்கருக்குமன்றோ! இத்தொண்டுக்கு உறுதுணையாக நிற்பதே 'புனித ஒலி'யின் ஒரே நோக்கமாகும். நமது ஆன்ம ஈடேற்றத்துக்குரிய கருமங்களை மகிழ்ச்சிதரும் முறையில் வெளிப்படுத்திப் 'புனித ஒலி'யை மேலும் புனிதப்படுத்த உங்களுடைய உதவியை எதிர்பார்க்கின்றோம்.

---

# அக்கினி நாக்கு உருவமாய் இறங்கினர்
# ஆவியானவர்

பார் எல்லாம் ஒளிபரப்பத் திருமறையைத் தமது அப்போஸ்தலர் பரப்ப வேண்டுமென்று சித்தங்கொண்டார் தேவசுதன். தாம் பரலோகத்திற்கு எழுந்தருளிய பத்தாம்நாள் தூயஆவியானவரை அப்போஸ்தலரிடம் அனுப்பச் சித்தங்கொண்டார்.

இந்தச் சித்தத்தை நிறைவேற்ற, உருவற்ற அரூபியான இவருக்கு ஓர் உருவத்தைக் கொடுத்து அவர் வருகையை எல்லோரும் அறியப்பண்ணி மாண்பான தத்துவங்களைப் போதிக்கலானார் தேவன். முன்னொருமுறை அல்லற்பட்டு அலைமோதும் உலகிற்குச் சமாதானத்தையும், அமரிக்கையையும் அனுப்பும் அறிகுறியாகப் புறா உருவத்தில் யோர்தான் நதிக்கரையில் யேசுநாதர்மேல் இறங்கினர் ஆவியானவர். இம்முறை அப்போஸ்தலர்மேல் ஆவியானவர் அக்கினி நாக்கு அதுவும் பிளவுபட்ட நாக்கு உருவமாக இறங்கியதன் தாற்பரியம் என்னவாகும்?

நாக்கு உருவமாக இறங்கினர் என்பதினால் மனித உறுப்புக்களிலே பிரதானமானது ஒன்று நாக்கு — மறியற்சாலை முன்றிலில் நிறுத்தப்பட்ட காவலன் போலவும், இராணுவ இரகசியங்களைப் பிறர் அறியவிடாது காப்பதற்காக வாயிலில் நிறுத்தப்பட்ட ஆயுதபாணியான வீரன் போலவும் உள் உறுப்புகளுக்கு ஊறுசெய்யக்கூடிய உண்டிவகைகளை உதறித்தள்ள ஊக்குவிக்கும் தன்மைவாய்ந்த உறுப்பு நாக்கு. நாக்கு நல்லதை ஏற்கவும், அல்லதைத் தவிர்க்கவும் தக்கதாகும். ஆவியானவரின் தூய ஆலோசனைகள், நன்மைதீமைகளை ஆராய எம்மவற்கு அத்தியாவசியம் என்ற அடையாளத்தை ஆணித்தரமாகப் பதியப்பண்ண இஸ்பிரீத்துசாந்துவானவர் நாக்கு உருவத்தில் தோன்றினர். அதுவும் பிளவுபட்ட நாக்கு எதற்கு என்று எண்ணும்போது, இருண்டுகிடந்த மண்டபத்தில் இருந்த அப்போஸ்தலர், ஆவியானவர் வரப்பெற்றதும் விண்ணேறு பெற்றவர்போல ஊக்கமும் உறுதியும் பெற்று, அவர்கள் ஒருமொழி பேச அங்கிருந்த பல்மொழி பேசுவோர் தத்தம் மொழியில் விளங்கிக்கொள்ள ஏற்பாடானது. இவரின் பின் அப்போஸ்தலர்கள் பல்மொழி வல்லுனராய், பல்தேச சஞ்சாரிகளாய், சாதுரியராய் விளங்கியதற்கு இது சான்றாகும்.

பற்றிய பொருள் அனைத்தும் தன்வயத்தாக்குவது அக்கினியின் தன்மை. சுவாலித்து எரியும் தீயானது அண்டிய பொருள் அத்தனையையும் அக்கினி மயமாக்குவது போல தேவநேசம் மூண்டு சுடர்விட்டுச் சுவாலித்து எரிந்தால் தான் உத்தம கத்தோலிக்க நெறி நிற்கலாம் எனக் காட்டுவதற்கு அறிகுறிதான் அக்கினிமயம்.

இத்தகைய தன்மையுடைத்தது இஸ்பிரீத்துசாந்துவானவரின் வருகை.

---

## மனத்தரித்திரர் பாக்கியவான்கள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப சஞ்சீவி

விண்ணுலக வாழ்வளிக்கத் திரித்துவந்தான்
விடுத்தவொரு திருவடமோ வெய்யபாவ
மண்ணுலகின் பிணிதீர்க்கும் மாமருந்தோ
வரங்களெல்லாம் நிரம்புமணிப் பேழைதானோ
எண்ணிறந்த அலகையெல்லாம் கண்டேஅஞ்சும்
இணையில்லாக் கேடயமோ தாயார்தந்த
கண்ணிறைந்த குடும்பசெப மாலைதன்னைக்
கருத்துடனே யோதிநலன் காண்போம் வாரீர்.

●

பூக்குழலாள் புனிதவதி எலிசபேத்துப்
பொலன்தூதர் கபிரியேலால் புனைந்தமாலை
நீக்கரிய புதுமைகளால் நிறைந்த லூர்தாம்
நிகரில்லாப் பதிகண்ட நேசமாலை
வாக்குமன மெட்டாத ஈசன் ஞான
மகிமைநிறை சந்நிதிக்கே வாய்த்தமாலை
காக்குமொரு சஞ்சீவி யென்றே போற்றிக் [வாரீர்.
கணப்போதும் நினைப்போடு செபிப்போம்

●

மனம்போன போக்கினிலே வாழமாட்டார்
மாபாவப் படுகுழியில் வீழமாட்டார்
தனந்தேடிப் புதைப்பதிலே காலம்போக்கார்
சதமென்றே புவிவாழ்வைச் சற்றும்நோக்கார்
இனந்தேடிக் கனந்தேடித் திரியமாட்டார்
இகலோக பரலோக ஏணியென்றே
தினந்தோறும் குடும்பசெப மாலைசொல்லித்
தேவதாய் பாதமலர் சேவைசெய்வார்.

●

எந்தையராம் யேசுபிரான் சித்தத்தோடே
இணைந்தெமக்காய் இரட்சணியம் ஈந்ததாயார்
தந்ததிரு மாலையதை எந்தநாளும்
தாய்தந்தை தனயரெல்லாம் ஒன்றுகூடிச்
சிந்தைமகிழ் வோடினிது செபிக்கின் இல்லம்
சிங்கார வனப்புடனே திகழும் ஆதி
அந்தமிலான் திருவருளும் பெருகும் உள்ளத்
தாறுதலும் தேறுதலும் அனைத்துமாமே.

●

தித்திக்கும் முக்கனியின் பாலுந் தேனும்
தீம்பாகும் நிகராகச் சீர்த்திவாய்ந்து
எத்திக்கும் ஞானமணம் பரிமளிக்கும்
இன்பமய மானசெப மாலை என்னும்
பத்திக்கே யீடான தொன்றுமுண்டோ [பாயும்
பரம்பொருளின் வரங்களெல்லாம் நிரம்பிப்
புத்திக்கும் எட்டாத மோனவெள்ளப்
புனல்மூழ்கி மோட்சகரை போந்துவாழ்வாம்.

# தேவநேசத்துக்கு எதிராகப்பாயும் 5 ஏவாயுதங்கள்

## 1-வது: விசுவாசக் குறைவு

நீர் தேவனை முழு இருதயத்தோடும் நேசிக்காதிருப்பின் உமது விசுவாசக் குறைவுதான் அதற்குக் காரணமாய் இருக்கலாம்.

தேவனே அதிஉன்னத நன்மை என்பதையும் அவரால் வராத நன்மை உமக்கு வேறு இல்லையென்பதையும் நீர் முழுமையாக விசுவசிககவில்லைப்போலும்!

அர்ச்சியசிஷ்டர்கள் இதை நன்கு அறிந்திருந்தார்கள். ''எதை நீ விரும்புகிறுய்? உனது தேவன் உனக்கு வேண்டுமா? அல்லது, உனது உயிர் உனக்கு வேண்டுமா?'' எனக் கொலைபாதகர்கள் கேட்டபோது, ''சகல நன்மைச் சுரூபியாகிய தேவனே எனக்கு வேண்டும்'' என்று வேதசாட்சிகள் ஒவ்வொருவரும் விடைபகர்ந்ததை மனதில்வைத்து உமது விசுவாசத்தைக் கூட்டிக்கொள்ளுவீராக.

## 2-வது; தவருன பாசம்

நீர் தேவனை முழு இருதயத்தோடும் நேசியாதிருப்பின் உமது தவருன பாசமே அதற்குக் காரணமாய் இருக்கலாம்.

உமது ஐம்பொறி உணர்ச்சிகளுள் தேவன் அடங்காதிருப்பவராதலால் அவற்றுள் அடங்கிய ஒரு சடப்பொருளுக்குத் தேவனுக்குரிய முதலிடத்தைக் கொடுத்திருக்கிறீர் போலும்!

இந்தத் தவருன பாசத்தினுலே நீர் அடையும் இன்பம் உம்மை ஏமாற்றுகிறது. உம்முடைய விருப்பத்தைக் கவர்ந்திருக்கும் இச்சடப்பொருள் சிலகாலத்தில் இல்லாது போய் விடும் என்பதையும், அதனுல் நீர் அடையும் இன்பம் துன்பமாய் மாறும் என்பதையும் சிந்தனையிற் கொள்வீராக. காரண கர்த்தாவுக்குரிய முதலிடத்தை அவரது சிருட்டி ஒன்றுக்குக் கொடுப்பது புத்தியீனமல்லவா?

## 3-வது: மிதமிஞ்சிய உலக கவலைகள்

நீர் தேவனை முழு இருதயத்தோடும் நேசியாதிருப்பின் உமது மிதமிஞ்சிய உலக கவலைகள் அதற்குக் காரணமாயிருக்கலாம். உலகசெல்வாக்கை ஈட்டுவதற்கு ஒரு நாளிலுள்ள 24 மணித்தியாலங்களும் உமக்குப் போதாது இருக்கையில் தேவனை வழிபடவோ, அவரைப்பற்றிச் சிந்திக்கவோ நேரமில்லாது இருக்கிறீர் போலும்!

''ஒருவன் உலகம் அனைத்தையும் ஆதாயமாக்கிக் கொண்டாலும் தனது ஆத்துமத்தை இழந்துவிடுவானுகில் அவன் அடையும் பயன் யாது?'' என்னும் வினவை என்றென்றும் மனதில் வைத்திருப்பீராக.

## 4-வது: குரு விரோதம்

நீர் தேவனை முழு இருதயத்தோடும் நேசியாதிருப்பின் உமது மனதில் குருவிரோதம் இருப்பதும் காரணமாயிருக்கலாம்.

பலவீனமுள்ள மனிதர்மத்தியிலிருந்தே தேவதொண்டுக்குத் தெரிந்தெடுக்கப்படுகிறுர் குருமார் என்பதையும், அவர்கள் பலவீனமுள்ளவர்களாய் இருப்பினும் தேவன் எமது ஆன்ம ஈடேற்ற அலுவலை அவர்கள் கைகளினுலே ஆற்றச் சித்தமாய் இருக்கிறுர் என்பதையும் நீர் மறந்துவிட்டீர் போலும்!

(தொடர்ச்சி 8-ம் பக்கம்பார்க்க.)

ஏனெனில் மோட்ச இராட்சியம் அவர்களுடையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உனக்குக் கிடைத்த இந்த நாளிலாவது (உனக்குரியவைகளை) நீ அறிந்திருந்தாலோ" லூக். 19, 24.

"துயில்விட்டெழுந்து எல்லை சேருமட்டும்
வெளிச்சம் பெற்றிடுவாய்" (கதா. உபநிசாட். I, 3, 14)

**வாலிபனே !**

சீக்கிரம் சத்துராதி உலகினுள் பிரவேசிக்கப்போகின்றாய். உனக்கு என்ன அவசியமென நினைக்கின்றாய்? போர்வீரன் யுத்த களத்தில் புகும்பொழுது ஆயுதங்களின்றிச் செல்வதில்லை. உலகினுள் நீ புகும்பொழுது சத்துராதிகள் உன்னைக் காத்து நிற்கிறார்கள். உலகம், சரீரம், பிசாசு என்பவைகளே இவை. வெறும் கையுடனேயா இப்போர்க் களத்தில் செல்லப்போகின்றாய்.

**விசுவாச கேடயம்.**

நீ பசாசின் தந்திர சோதனைகளுக்கு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவனாயிருக்கும் படிக்குச் சருவேசுரனுடைய பேராயுதங்களை அணிந்துகொள். ஏனெனில் உனக்குள்ள போராட்டம் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும் வல்லமைகளோடும், ஆகாச மண்டலங்களிலுள்ள அக்கிரம அரூபிகளோடும், இந்த அந்தகார உலகாதிபதிகளோடுமே.

இதன் நிமித்தம் பொல்லாத நாளிலே அவைகளை எதிர்த்து நிற்கவும், எல்லாக் காரியங்களிலும் நீ உத்தமனாய் நிலை நிற்கவும் திராணியுள்ளவனாய் இருக்கும்படிக்குச் சருவேசுரனுடைய பேராயுதங்களை எடுத்துக்கொள். நீ எடுத்து நிற்கும் ஆயுதங்களில் முக்கியமானது விசுவாசமென்னும் கேடயம். சத்துராதியின் எவ்விதமான அம்புகட்கும் நின்றுபிடிக்கக்கூடிய இன்றியமையா ஆயுதமே விசுவாசம். சருவேசுரன் வெளிப்படுத்திய வேத சத்தியங்களையெல்லாம் நாம் தத்தளிப்பின்றி உறுதியான மனசுடன் ஏற்றுக்கொள்ளப் பண்ணும் சுபாவத்திற்கு மேலான தேவவரமே இது.

பசாசானது நம்மைச் சரீர ஆசாபாச இன்பங்களால் மயக்கி இழுத்துச்செல்கையில், விசுவாசமானது எங்கள் கண்முன் அகோர நரக தண்டனையைத் திறந்து காட்டி, இதுதான் காமாதுரத்துக்கு வரவிருக்கும் நித்தியகதி என்று சொல்லும்.

உலக ஆடம்பரங்களையும், இன்றைக்கிருந்து நாளைக்கு அழிந்துபோகும் பணம், பண்டம், மகிமை, பெருமையையும் நாம் விரும்பி மூடத்தனமாய் அலையும்போது, விசுவாசமானது மோட்சத்தை எமக்குத் திறந்துகாட்டி, இதுதான் தேவன் தம்மை இவ்வுலகிற் சிநேகிக்கிறவர்கட்கு ஆயத்தப் படுத்தியிருக்கும் எல்லாத்துக்கும் மேலான சம்பாவனை என்றும் சொல்லும்.

---

# நான் அழிந்தபிறகு வா

நவரட்டினம் சுவாமியார் ஒரு குருசபையின் போதகர். இவருடைய குருசபை 'யாழ்தோன்' நகரத்திலுள்ள 'கொத்தூர்' என்னுங் கிராமத்திலுள்ளது. 'நவரட்டினம்' சுவாமியார் என்ற பெயர் அவரிடமுள்ள ஒன்பது குணங்களும் மிகவும் போற்றத்தக்க தென்பதற்காக அவ்வூர் வாசிகள் சூட்டிய காரணப்பெயராகும். அவரது சொந்தப்பெயர் யோசுவா.

யாழ்தோன் (Yarlton City) நகரத்து அதிபதியாகிய அலென் பிரபு மிகவும் கர்வமுள்ளவர். **நான்** என்ற தற்பெருமை கொண்டவர். யோசுவா சுவாமியாரின் போதனைகளைக் கேள்வியுற்ற அலென் பிரபு சுவாமியாரைத் தன் 'இராசபதி'க்கு அழைத்துவரும்படி தன் தூதுவனை அனுப்பினார். தூதுவன் கொத்தூர் குருக்கள் ஆச்சிரமத்தை அடைந்து, கதவுக்கு அருகாமையிலுள்ள யுவானி என்ற சிஷ்யனை அழைத்து, "உங்கள் குருவைக் காணவேண்டும்; கதவைத்திற" என்றான்.

**யுவானி :** "யோசுவா சுவாமியவர்கள் இப்போது சிலுவை ஆராதனை நிஷ்டையிலிருப்பார்; அவரைக் காண முடியாது."

**தூதுவன் :** "எப்பொழுது அவரைக் காணலாம்?"

**யுவானி :** "மாலை 5 மணியளவில் 10 நிமிடங்கள் மட்டும் பேசுவார்."

இதைக் கேட்டுக்கொண்டு யாழ்தோன்நகரம் திரும்பி வந்த தூதுவன் அப்படியே அலென் பிரபுவிடம் கூறினான். அவ்வாறே யுவானியும் நடந்ததை யோசுவா சுவாமியாருக்குக் கூறினார்.

தூதுவன் சொன்ன வார்த்தைகளைக் கேட்ட அலென் பிரபு கோபமடைந்து, ஆவேசத்துடன் குறிக்கப்பட்ட மாலை 5 மணிக்குக் கொத்தூர் ஆச்சிரமத்தை அடைந்து குருக்களைக் கண்டு,

**அலென் பிரபு :** "**நான்** அனுப்பிய தூதுவனை அலட்சியம் செய்துவிட்டார் யுவானி."

**சுவாமியார் :** (தலையை ஆட்டினார்.)

**அலென் பிரபு :** "**நான்** இந்நகர் அதிபதியென்றும் பாராமல் யுவானி என் தூதுவனுக்கு வரவேற்புக் கொடாமல் வாசல்புறமே நின்று பேசிவிட்டார். அதுவுமல்லாமல் **நான்** கொடுத்த செய்தியையாவது என்னவென்று கேட்டு உங்களுக்கு அறிவிக்காமல் விட்டுவிட்டார் யுவானி!"

---

**சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள் ;**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னைப்பற்றியே, இங்கு.

**[ நளின பரிகாசமுமல்ல, ஆய்ந்தோய்ந்து அறியாத் தடுமாற்றமுமல்ல, உன் நெறிநிலை கோணாச் செயலாற்றலும் தீர்க்காலோசனையுமே தேவ அனுக்கிரகத்தால் உன்னைக் காப்பாற்றும். இங்கு, நீ விரும்பினாலும்சரி, விரும்பாவிட்டாலும்சரி, நித்தியத்துக்கும் உன்னைத் தாக்கவிருக்கும் சிலஉண்மைகளைத் தருகிறோம். ஆழ்ந்துசிந்தி.]**

எங்களின் ஆதித்தாய் தந்தையரைத் தேவன் சுபாவத்திறகு மேற்பட்ட அந்தஸ்தில் உண்டுபண்ணாமலும், சென்ம பாவத்திலிருநது எங்களை மீட்காமலும் இருந்திருந்தால் எம் கதி என்னவாய் இருந்திருககும் என்பதை நாம எளிதில் மறந்துவிடுகிறோம். தேவனின் அருள் இல்லாவிடில் மனிதனின நிலை எனனவாயிருக்கும் எனபதை நாம் சிறிது சிந்திப்போமாகில், நாம் அதை மிகக் கனமாய் மதித்து வருவோம்.

**சுபாவ அந்தஸ்து :**

மனிதன் ஆன்மாவும் உடலும் கொண்ட ஒரு மிருகம். அவனுடைய ஆனமா அரூபியாயும், அறிவால் அலங்கரிக்கப்பட்டதாயும், சாகாவரம் உள்ளதாயும் இருக்கிறதினாலேயே மனிதன் மற்ற மிருகங்களிலும் பார்க்க மேலானவனாய் விளங்குகின்றான். மனிதனின் சுபாவஉரிமைகளுக்கு மேற்பட்ட எதையும் அவனுககு அளிக்காமல் சுபாவநிலையிலேயே தேவன் மனிதனைச் சிருஷ்டித்திருக்கக்கூடும். அப்படியிருக்குமாகில் மனிதன் தன் சீவியத்தில் சுபாவ இலட்சியம் ஒன்று மட்டும் உடையவனாய், சுபாவ ஒழுங்கு ஒன்றினால் மட்டும் வழிநடத்தப்பட்டு, சுபாவ நன்மை ஒன்றையே நாடுகின்றவனாக இருப்பான். தேவனின் திருமுக தரிசனத்தைக் காண வேண்டும என்னும் ஆவலாவது சக்தியாவது அற்றவனாய் இருப்பதுடன், அவனின மரணத்தின் பின்னர், அவனுடைய கிரியைகள் சுபாவ ஒழுங்குக்கு ஒத்தவையாய் அல்லது எதிர்மாறானவையாய் இருப்பதற்குத தககபடி சுபாவ சம்பாவனை அலலது அதற்குரிய ஒரு தண்டனையைப் பெற்றுக்கொள்ளுவான். ஞானஸநானததின முன் மரிக்கும் குழந்தைகள், சுபாவமான சம்பாவனையொன்றையே பெற்றுக்கொள்ளுகிறார்கள்; இதன்படி ''லிம்போ'' என்னும் இளைப்பாற்றி ஸ்தலத்தில் அவர்கள் சந்தோஷமாக இருக்கிறார்கள். மனிதனும் சுபாவத்துக்கு மேற்பட்ட கதி ஒன்றின்றிச் சிருஷ்டிக்கபபட்டிருப்பானேயாகில், அவனின் பாக்கியமும் இத்தன்மையாகவேதானே இருக்கும்.

( தொடர்ச்சி 6-ம் பக்கம்பார்க்க.)

---

**சுவாமியார் :** (அதையும் கேட்டுப் புன்னகையோடு தலை அசைத்தார்.)

**அலென் பிரபு :** '' **நான்** உங்களிடம் வராமல் **நான்** இருக்கும் இராசபதிக்கு உங்களை அழைத்துப் போதனை கேட்கத்தான் தூதுவனை அனுப்பினேன. இப்போது உங்களிடம் சில போதனைகள் கேட்க விரும்புகிறேன்.''

**சுவாமியார் :** ''நீ இப்பொழுது போதனை கேட்க வராதே. **நான் அழிந்தபிறகு** வா.''

**அலென் பிரபு :** ''என்ன பேசுகிறீர்கள், நீங்கள் அழிந்த பிறகு யாரிடம் போதனை கேட்பது? ஒன்றும் புரியவில்லையே !''

என்று சொல்லிக்கொண்டு மனங்குழம்பிப் போய்விட்டார்.

தன் அரண்மனைக்குச் சென்ற அலென் பிரபு எதிலும் மனஞ் செல்லாது, ஒன்றும புரியாது நாலு ஐந்து நாட்களாகச் சிந்தனையிலேயிருந்துவிட்டார். அதனபின் எவரோடும் இரக்கமாகவும் இதமாகவும், எல்லோர்க்கும் எல்லாவேளையும் எல்லாம் செய்யக்கூடிய உத்தமனாகவும் மாறிவிட்டார். எல்லாம்வல்ல இறைவனாலேதான் யாவும் நடைபெறுகிறதென்ற கொள்கையைக் கடைப்பிடித்து வாழ்ந்தார்.

அலென் பிரபுவின் புதிய வாழ்வைப்பற்றிக் கேள்விப்பட்ட யோசுவா சுவாமியவர்கள் அவரிடம் தாமே எழுந்தருளி இராசபதியை அடைந்து, காவலாளியிடம்,

**சுவாமியார் :** '' உங்கள் பிரபுவைக் காணவேண்டும்.''

**காவல்காரன் :** ''முடியாது. இது அவர் வேண்டுகோள்.''

**சுவாமியார் :** '' வேண்டுகோளா, கட்டளையா ?''

**காவல்காரன் :** ''கட்டளையல்ல, யாரானாலும் எதுவானாலும் அவனவன் மனச்சாட்சிக்கு விரோதமின்றி எப்படியும் எல்லோரும் விரும்ப நடக்கலாம். அதற்காக இனித் **நான்**தான் அதிபதி, **நான்**தான் எல்லாம் எனபதை எண்ணி மக்கள் தன்னிடம் அடிபணிய வரக்கூடாது என்ற ஒழுங்கு முறையை நிலைநாட்டவே என்னிடம் யாரையும் விடக்கூடாது என்ற வேண்டுகோளை விட்டார்.''

**சுவாமியார் :** ''எல்லாம் புரிந்தது. அவர் இஷ்டப்படி அவரைக் காண விரும்புகிறேன்.''

என்று கூறி அலென்பிரபுவின் இருப்பிடத்துக்குச் சென்றார் சுவாமியார். சுவாமியாரைக கண்ட அதிபதி உடனே எழுந்து வணக்கம் செய்து ஆசனத்தில் அமரச் செய்தார். இதைக் கண்ட சுவாமியார்,

**சுவாமியார் :** "**நான் அழிந்தபிறகு** வந்துவிட்டேன்.''

**அலென் பிரபு :** '' ஒன்றும் புரியவில்லையே சுவாமி! இந்த வாக்கியமே என்னை வேதனைப்படுத்தியது. **நீங்கள்** அழிந்தபிறகு நான் உங்களைக் காண்பது! அப்படி என்ன செய்துவிட்டேன் ?''

**சுவாமியார் :** "**நான்** என்றால் உங்களிடமுள்ள **நான் என்ற அகங்காரம், தற்பெருமை, ஆணவம்** என்ற அத்தனையும் **அழிந்த** பிறகுதான் என்னைக் காணவரும்படி சொன்னேன்.''

என்று சொல்லிச் சுவாமியார் தமது கழுத்தில் தொங்கவிட்டிருந்த சிலுவையைக்காட்டி, "**நான் அழிந்தபிறகு வா**' என்ற சீமான் இவரே என்றார்.

[ இக்கதை இத்தாலிநாட்டுக் கவிஞன் 'ATIYAK' என்பவரால் எழுதப்பட்ட "ACROSS THE CROSS" என்ற நூலிலுள்ள ஒரு கதையின் சிறுபாகம்.]

---

**ஏனெனில், அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2-ம் வத்திக்கான் பொதுச்சங்கம்

### சித்திபெற ஒறுத்தல் முயற்சிகள்வேண்டும் எனக் கூறுகிறது

# பாப்பரசரின் புதிய சுற்றுநிருபம்

ஞானக்கருமங்களுக்கு அவைக்குரிய முதலிடம் கொடுக்கத் தவறுதவர் நமது பரிசுத்ததந்தை 23-ம் அருளப்ப பாப்பரசர். அவர் தமது ஆட்சியில் எழுதியருளிய ஏழாவது சுற்றறிக்கை கிடைத்துள்ளது. அதில் உலகத்தின் சகல கத்தோலிக்க மேற்றிராணிமார்களிடமும் 2-ம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் சித்திக்காகத் தத்தம் மேற்றிராசனப் பங்குகள் ஒவ்வொன்றிலும் விசுவாசிகள் கண்ணியமான செபங்களும், ஒறுத்தல்களும் செய்யுமாறு கேட்டிருக்கிறார். இவ்வாறு மேற்றிராணிமார் அனைவரும் தமது மந்தைகளுடைய ஞான உழைப்பின் பயனுடன் பொதுச்சங்கத்துக்கு வந்துகூட வேண்டுமென்பது பரிசுத்தபிதாவின் விருப்பம். ''நாம் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு ஆகிய வேதாகமங்களை ஆராய்ந்து பார்ப்போமானால் தேவன் மனிதரின்மேல் இரங்கி அனுக்கிரகிக்கும் காலங்களுள் ஒவ்வொன்றின் முன்னும் மனிதர் செபஞ்செய்யவும், ஒறுத்தல் முயற்சிகள் பண்ணவும் தூண்டப்பட்டிருக்கின்றனர் என்பது தெளிவாகத் தோன்றுகின்றது'' என்கிறார் எமது பரிசுத்த தந்தை.

நாம் ஒறுத்தல் செய்வது அவசியம். எமது ஆன்ம சத்துராதிகளைத் துரத்திவிடவோ, ஞானஸ்நானத்தினால் நாம் அடைந்த பரிசுத்ததனத்தைக் காப்பாற்றவோ அல்லது பாவத்தினால் இழந்துபோன இஷ்டப்பிரசாதத்தை மீளவும் பெற்று எம்மில் நிலைநாட்டவோ, எமது உடம்பை வருத்திப் புண்ணியங்களைத் தேடிக்கொள்வது அவசியமாகின்றது. இப்புண்ணியங்கள் எங்களைத் தேவனின் அன்பர்களாக்குகின்றன. இத்தகைய புண்ணியக் கிரிகைகளினாலும், செபங்களினாலும் வரும் பயன்களைப் பொதுச்சங்கத்தின் சித்திக்காக உபயோகிக்குமாறு பரிசுத்த பாப்பரசர் எங்கள் ஒவ்வொருவரையும் கேட்டுக்கொள்ளுகின்றார். அதுவுமன்றி, அதே நோக்கத்துடன் சில விசேஷ பக்தி முயற்சிகளையும் அவர் கட்டளைபண்ணுகின்றார்.

முதன்முதல் சபையில் ஆலோசனை செய்ய இருக்கும் சபைப்பிதாக்கள்மேல் திவ்விய இஸ்பிரீத்துசாந்துவாகிய சருவேசுரன் தமது விசேஷ வரப்பிரசாதங்களைப் பொழியுமாறு நவநாள் ஆராதனை மேற்றிராசனப் பங்குகளில் நடைபெறவேண்டும். மேலும், அவ்வாறே பாவப்பரிகார வழிபாடு ஒன்றை ஒவ்வொரு மேற்றிராசனப் பங்கிலும் நடத்தி, விசுவாசிகளைப் பிறர்சிநேக முயற்சிகளில் ஈடுபடவும், உகந்த ஒறுத்தல்கள் செய்யவும் தூண்டிவிடவேண்டும். இவ்வாறு செய்வதனாலேயே கிறிஸ்தவ நல்வாழ்வை நாம் மறுமலர்ச்சி அடையச் செய்யலாம் என்பது பரிசுத்ததந்தையின் அபிப்பிராயம். பொதுச்சங்கத்தின் முக்கிய நோக்கங்களில் இதுவும் ஒன்று.

ஒறுத்தல்கள் இருவகைப்படும். அவை உள் ஒறுத்தல், புற ஒறுத்தல் என்பன. நாம் செய்த பாவத்துக்காகத் துக்கப்பட்டு எமது மனதைச் சுத்தஞ்செய்து பாவசங்கீர்த்தனம் பண்ணித் திவ்விய சற்பிரசாதம் பெற்றுத் தேவனுடன் ஒன்றித்துக்கொள்வது உள் ஒறுத்தல் எனலாம். எங்களுக்குச் சீவியத்தில் நேரிடும் சகல கஷ்ட துன்பங்களையும் பொறுமையோடு கையேற்றுத் தேவனின் சித்தத்துக்கு அமைந்து, எமது அந்தஸ்துக்குரிய கடமைகளைச் சரிவரச் செய்து கிறிஸ்தவ புண்ணியங்களை அனுசரித்து வருவதே புற ஒறுத்தலாகும். இவ்விருவகை ஒறுத்தல்களும் அவசியம். இரட்சணிய வேலையில் நாம் சருவேசுரனின் சகாக்களாக இருக்கின்றோம். அவர் தரும் வரப்பிரசாதங்களுடன் நாம் ஒத்துழைக்கவேண்டும். சருவேசுரனுடன் நாம் ஒத்துழைக்காவிடில் அவரைப் புறக்கணிக்கிறவர்களாவோம். பரிசுத்த பொதுச்சபையின் முயற்சிகளும் இரட்சணிய வேலையில் எம்மைத் தேவனது சகாக்களாக்கும் வழியிலேயே இட்டுச்செல்கின்றன. இச்சபையின் முடிவுகளின் சித்தியும் என்னத்தில் தங்கியிருக்குமெனின், அவற்றை ஏற்றுக்கொள்ளும் விசுவாசிகளின் நல்மனதிலேயாம்.

---

## உன்னைப்பற்றியே இங்கு

( 5-ம் பக்கத் தொடர்ச்சி. )

**சுபாவத்திற்கு மேற்பட்ட அந்தஸ்து:**

ஒரு நியதியின்படி, மனிதனைச் சுபாவநிலையிலிருந்து சுபாவத்திற்கு மேற்பட்ட நிலைக்கு உயர்த்தத் தேவன் திருவுளம் கொண்டார். ஆகவே ஆதாம் ஏவாள் சிருஷ்டிக்கப்பட்ட பொழுது தேவன் அவர்களின் ஆன்மாவை அர்ச்சிக்கும் அருளினால் நிரப்பியருளினார். அது அவர்களைச் சுபாவ அந்தஸ்துக்கு மேற்பட்ட நிலைக்கு உயர்த்தி, தேவனின் திருமுக தரிசனையை அவர்கள் விரும்பித் தேடும்படிசெய்து, வரப்பிரசாதத்தினால் ஏவப்பட்ட தங்களின் கிரியைகளின் மூலம் அவர்கள் அதை அடையவும் அவர்களுக்குத் துணைபுரிந்தது. நித்திய மகிமையை அடைதல் அவர்களுக்கு எளிதானதாய் இருக்கும்படி தேவன் எங்களது ஆதித்தாய்தந்தையருக்கு ஆசாபாசங்கள் இன்மையையும், சரீர சாவின்மையையும் கொடுத்திருந்தார். ஆசாபாசங்கள் இன்மையாவது, துர் இச்சைகளின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றிருத்தலாகும். வேறுவிதமாகச் சொன்னால் எங்களது இச்சைகள் உணர்ச்சிகள் அனைத்தும் எங்களின் அறிவிற்கு அடங்கியிருத்தலாகும். சரீர சாவின்மையானது, மனிதனை மரணத்திலிருந்து காத்திருக்கும். ஆதலின், அவன் தன் உலக வாழ்க்கையின் முடிவில் தான் இருந்த மாதிரியே ஆன்ம சரீரத்துடன் மோட்சத்திற்கு எடுத்துக்கொள்ளப் பட்டிருப்பான்.

---

**நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்;**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் இடம் — தாய்மைத்துவம்

கடந்த 50 வருஷங்களிலேயும் உண்டாகிய விஞ்ஞான சம்பந்தமான மாற்றங்களும், தொழில் நுணுக்க முன்னேற்றமும், பெண்ணானவளைத் தனது இல்ல மறைவினுள் இருந்து புறப்படுத்தி, சமூகத்தின் முன்னே கந்தோர்ச்சாலைகளிலும், தொழில் மண்டபங்களிலும் மனுஷனுக்கே பிரத்தியேகமாயுள்ள உத்தியோக ஸ்தலங்களிலும் கொண்டுவந்து விட்டுவிட்டது.

இந்நிலையானது, எத்தனையோ ஆபத்துக்களை உண்டு பண்ணக்கூடியது. பெண்ணானவள் சிருஷ்டிகரால் உண்டு பண்ணப்பட்டபோது அவரது நோக்கம் இவள் மனிதனைப் பூர்த்தி செய்வோளாய் இருக்க வேண்டுமென்பதே. ''சமவுரிமை, சமவுரிமை'' என்று எங்கும் சொல்லித்திரிபவர்கள், பெண் உலகில் **வகிக்கவேண்டிய இடமும்** மனிதனைப் போல் சமமாயிருக்கவேண்டுமெனச் சொல்ல ஒண்ணாது. பெண்ணின் இடமோ, தாய்மைத்துவம் வகிக்கும் இடம். அவளின் குணங்களும், சாய்மானங்களும், இயற்கை நாட்டங்களும் அவளை மனிதனின்னின்று புறம்பாக்கி, பிரத்தியேக கடமைகளை அவளுக்குரியதாக்கி, மனிதன் வகிக்கும் இடத்தைப் பூர்த்தியாக்குகின்றன. ஆகவே, பெண்ணானவள், குற்றமற்ற எவ்வுத்தியோகத்தில்தான் ஈடுபட்டிருந்தாலும் அவ்விடத்திலிருந்துகொண்டே தனக்குரிய பிரத்தியேக கடமையாகிய தாய்மைத்துவத்தைப் பற்பல விதங்களிலும் காட்டியருள முன்வருவாள். பிள்ளைகளைப் பெற்றுவளர்ப்பதில் மாத்திரந்தான் அது தங்கியிருக்கிறது என்று நினைப்பது தவறு. அதிலும் மேலான முறையில் உள்ள தாய்மைத்துவம் உண்டு. உலகம் அவசியமாய் வேண்டி நிற்கும் சில சேவைகள் உண்டு; விசேஷமாய் ஆண்மக்களின் வன்நெஞ்சத்தாலும், குரூர செயல்களாலும் இடைஞ்சற்படும் உலகின்மீது, தாய்க்குரிய தனது கரங்களை நீட்டி இனிய மொழிகளால் தைலம்பூசும் செயல்கள் புரியும் பெண்ணின் சேவைகள் வேண்டும். சுயநலங்கருதாப் பெருங்குணத்துடன் அவள் சமூகசேவாப் பற்பல துறைகளிலும் இறங்குவாள்; கல்வித்துறையில் கருத்துடன் பணிபுரிவாள்; சமூகத் தொண்டில் சலியாதுழைப்பாள்; சமயசேவையில் சதா எண்ணங்கொள்வாள்; தன்னை மறுப்பாள்; தன்னை ஒறுப்பாள்; பிறரில் யேசுவைக் காண்பாள்; வேண்டுமாயின் உலகில் வசித்தாலும் உலகைத் துறந்த தியாகியாய், பிறருக்குச் சேவை புரியும் அலுவலிலே முற்றும் ஈடுபடத் தயங்கவே மாட்டாள்.

---

## பெற்றோர் கவனத்திற்கு:

# நன்மையா, தின்மையா?

### அழைக்கிறோம்

கத்தோலிக்க பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு ஞான வரப்பிரசாதங்களைக் கொடுப்பதில் மிகவும் கருத்துடையவர்களாக இருக்கிறார்கள். இது தேவனுக்கு மிகவும் விருப்பமான செய்கையாகும். முதல்முதலாக ''ஞான ஸ்நான''த்தினால் இஸ்பிரீத்துசாந்துவின் விசுவாச வெளிச்சத்தைத் தங்கள் பிள்ளைகள்மேல் வரவிட்ட பெற்றோர்கள் அடுத்து "முதன் நன்மை" வழியாக இறைவனுடைய வரப்பிரசாதங்களை அடையச் செய்கிறார்கள். இந்த வேளையில் அந்த இளம் உள்ளங்கள் திவ்விய இரட்சகருடைய வரவினால் மலர்கின்றன. மனதில் எல்லையில்லாத மகிழ்ச்சி நிறைகிறது. தங்களுடைய மென்மையான இதயத்தில் அந்தத் திவ்விய யேசுவை ஏற்றிப் புகழ்ந்து பாடுவதில் அவர்கள் உள்ளங்கள் மகிழ்வதை நாம் காணலாம். இது அனுபவத்தில் கண்ட உண்மை. இந்த உண்மையே அவர்கள் எதிர்கால விசுவாசத்தின் நங்கூரமாகும். இந்தத் தணியாத வரப்பிரசாதங்களைப் பிள்ளைகளுக்கு விரும்பி அளிக்கப் பெற்றோர்களை நாம் அறைகூவி அழைக்கிறோம்.

### வருந்துகிறோம்

அன்பின் ஜோதியாகிய அந்தப் பரம கடவுளைத் தங்கள் மலர் உள்ளத்தில் இருத்திப் பூமாலையாலும், பாமாலையாலும் அவரை அணிசெய்ய வேண்டியவர்கள் நன்மைபெறும் சிறார்களாகும். இதற்கு வேண்டிய தேவஅறிவை ஊட்ட வேண்டியவர்கள் பெற்றோர்கள். இறைவனோடு தம்பிள்ளை சல்லாபிப்பதைப் பார்த்துத் தம் நெஞ்சுக்குள்ளேயே மகிழ்வது பெற்றோருக்குக் கிடைத்தற்கரிய பாக்கியமாகும். ஆனால், எங்கள் பெற்றோர்கள் சிலர், வீண்கொண்டாட்டங்களில் மட்டும் திருப்தி காண்கிறார்கள். இது வருந்தத்தக்கது. நன்மை நிறைந்திருக்கும் பிள்ளைகள் மனதில் தின்மையை விளைவிக்கும் சிற்றின்பப்பாடல்களை ஒலிபரப்புகிறார்கள்—பிள்ளையும் பாடுகிறது; பாட்டுக்கு ஏற்ப ஆடவும் செய்கிறது.

அந்தப் பிள்ளையின் உள்ளத்திலே இறைவன் உதட்டிலே சிற்றின்பப்பாடலா?... இது மட்டுமா, ஆடல் பாடல் நிகழ்ந்து கொண்டிருக்கும்போது ''குடிவகை''களும் மெல்ல மெல்ல உலாவ ஆரம்பித்து இறுதியில் பெரிய சண்டையில் முடிகிறது. இந்த நேரத்தில் பேசப்படும் வார்த்தைகள் அப்பப்பா... பிள்ளைகள் நன்மையா தின்மையா பெறுகிறார்கள் என்பதை உறுதியாகச் சொல்ல முடியாமல் இருக்கிறது. இத்தகைய பெற்றோர்களையிட்டு நாம் வருந்துகிறோம். எங்கே அமைதியும் அன்பும் இருக்கின்றதோ, அங்கே இறைவன் வாசம் செய்கிறார். இதைப் பெற்றோர்கள் கவனிப்பார்களா?...

---

**ஏனெனில், அவர்கள் திருப்தியடைவார்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல மதங்கள் தோன்றியதன் வரலாறு

ஒரு பையன் பரீட்சை ஒன்றிற்குப் பணம்கட்ட இயலாமல் திகைக்கிறான். கட்டணத்துக்குள்ள கெடு வந்துவிட்டது. இந்நிலையில் நான் அவனுக்குப் பொருள் கொடுத்து உதவுகிறேன். அவனும் படித்து அத்தேர்வில் சித்தி அடைகிறான். அப்படியிருக்கும்போது அவன் என்னை நினையாமலும் எனக்கு நன்றி சொல்லாமலும் விடுவானோ? தனது கடமையைக் கருதி என்னைக் கனம்படுத்த மாட்டானோ? இதனாலே அவனுக்கும் எனக்கும் ஒருவித தொடர்பு உதிக்கிறது. இது ஒருவர் சொல்லியல்ல. இப்படியே நம்மைச் சிருஷ்டித்த தேவனுக்குத் தமது நன்கொடைகளை அபரிமிதமாய் அள்ளி இறைத்த அன்பருக்கு, நாமும் அன்பு செய்ய வேண்டும். அவரை அறிந்து பணியாற்றவேண்டும். இந்தத் தொடர்பும் இதனால் உதிக்கும் உரிமைகளும் கடமைகளும் தான் மதம்.

மனிதன் மண்ணில் உதிக்கும்போதே கடவுள் மட்டில் கடமைகளும் உரிமைகளும் உதிக்கின்றன. இதை எவரும் மறுக்கமுடியாது. இந்த மதம்தான் மக்கள் தம் கதியை அடைந்து மகிழச்செய்வது. இதனாலேதான் இவ்வுலகில் எம்மிடையே பல மதங்கள் நிலவி வருகின்றன. அதன் வரலாற்றைச் சிறுக ஆராய்வோம்.

ஆதி மனிதனைப் படைத்த ஆண்டவன் அச்சந்ததியின் இனிய வாழ்வைக்கருதி ஆதித்தாய் தகப்பனுக்கு அருளிய நன்கொடைகளுள் மிகத் தெளிவான அறிவும் ஆசாபாசமின்மையுமே முக்கியமானவை. இவற்றைப் பெற்று ஏதேன் என்னும் சிங்காரத்தோப்பிலே ஏது குறையுமின்றி இவர்கள் வாழ்ந்துவந்தார்கள். ஒருநாள் பாம்பு உருவம் எடுத்த பசாசினாலே ஏமாற்றப்பட்டார்கள்—பாவச்செயலில் கூச்சமின்றி இறங்கினார்கள். தேவ சாபம் அவர்கள்மேல் விழுந்தது. சிங்காரத்தோப்பினின்றும் துரத்தப்பட்டார்கள். முன்னே பெற்ற பூரண அறிவும் ஆசாபாசமின்மையும் மங்கிப்போகப் பற்பல தவறான எண்ணங்களுக்கு ஆளானார்கள். எனவே தம் பகுத்தறிவைக் கொண்டு புத்திக்குத் தோன்றியவாறு கடவுளை வழிபடத்தொடங்கினார்கள், அதையே தம் மதம் எனக்கருதினார்கள்.

அத்துடன் நின்றுவிடவில்லை, ஆசாபாசம் அவனை அலைக்கழித்தது. ஆண் பெண் உறவிலும் பணம், பேர், புகழ், தன்னலம், தன்மதிப்பு ஆதியவற்றிலும் ஆசைவைத்தான். ஆனால் அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாவதும் உண்மையே. மிதமிஞ்சின ஆசை தகாததொன்றாகும். அதுவே பாவத்தின் அடிப்படை. எனவே முறையற்ற இச்சை—தீமையின் மீது நாட்டம் முதலியனவற்றிற்கு அடிமைகளானார்கள். மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை கொண்டவர்களாய், தலையான பாவ உணர்ச்சிகள் பெருக, கடவுளை மறந்தார்கள்; தான்தோன்றித் தனமாய்ச் சீவித்தார்கள்.

இன்னும் ஆதிதொடக்கத்திலே மனித சந்ததி ஒரே இடத்தில் இருந்து ஒரே மொழியைப் பேசியதால் கடவுளைப் பற்றி உண்மை அறிவைப்பெற ஓரளவு வசதி இருந்தது. ஆனால் கடவுள் ஒரு மொழியைப் பல மொழியாக்கினார். மனித சந்ததி சிதறுண்டு உலகில் பல பாகங்களுக்கும் சென்றது. ஆதியிலே தமக்கிருந்த அறிவானது சிறிது சிறிதாக மங்கிப்போக, அச்சந்ததியின் தலைமுறைகள் தத்தம் புத்தியில் பட்டவாறு கடவுளைக்குறித்து எண்ணவும், வழிபடவும் தொடங்கின.

நன்மையாகத்தோன்றும் காரியங்களைக்கொண்டு அநாதியாயிருக்கிறவரைக் கண்டுபிடிக்கவும், சிருஷ்டிகளைப் பார்த்துச் சிருஷ்டிகர் யார் என்றும் அறியவும் முடியாமற்போனார்கள். நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சூரியன் போன்றவைகளையே உலகையாளுந் தேவர்களாக எண்ணினார்கள். நீரை வருணன் என்றும், நெருப்பை அக்கினிதேவன் என்றும், காற்றை வாயுதேவன் என்றும், ஆகாயத்தை இந்திரன் என்றும், சூரியனைச் சூரியா என்றும் வழிபட்டுவந்தார்கள், அவற்றின் அழகைக்கண்டு ஆனந்தித்தார்கள், பாராட்டிப் போற்றினார்கள், ஏன்? இவைகளே அக்காலத்தில் வாழ்ந்தவர்களுக்குப் பெரிதும் பயன்பட்டன. ஆனால் அனைத்தையும் படைத்துக் காக்கிற ஒருவர் உண்டே, அவர் எப்பேர்ப்பட்டவராய் இருப்பார் என்பதைச் சற்றும் சிந்தியாது போனார்கள்.

இதனால் அவர்களுடைய இருதயம் இருண்டு போயிற்று. தங்களை ஞானிகள் என்று நினைத்தார்கள். மதியீனர் ஆனார்கள். அழிவில்லாக் கடவுளின் மகிமையை அழிவுள்ள மனிதனுக்கும், பறவை, மிருகம், சர்ப்பங்களைப்போன்ற உயிர்களுக்கும் தந்தார்கள். அறிவிழந்து, புத்தி இருளடைந்து போகப் பல துர் இச்சைகளுக்கு ஆளானார்கள். கடவுளும் அவர்களை அசுசிகளுக்குக் கையளித்தார். ஏனெனில் அவர்கள் உண்மைச் சருவேசுரனை மறந்து, சிருஷ்டிகரைவிட்டு, சிருஷ்டிகளையே மேல் என்று தொழுது தொண்டு புரிந்தார்கள்.

இப்படியே சருவேசுரன் அவர்களை இழிவான துர் இச்சைகளுக்குக் கையளிக்கவே ஆணும் பெண்ணும் தத்தம் சுபாவ அநுபோகத்தை விட்டு, சுபாவத்திற்கு விரோதமாக நடந்து காமத்தீயால் எரிந்து, மிக மிக இழிவான செயல்களைப் புரிந்தார்கள். அதற்குத் தகுந்தகூலியும் பெற்றுக் கொண்டார்கள். சருவேசுரனுடைய நீதியையும் தங்களுக்குரிய நித்திய சாவையும் அறியமுடியாமல்போனார்கள்.

எனவே, எல்லா மதமும் ஒன்றுதான், அவை இறைவன் திட்டப்படியே தோன்றியுள்ளன என்றிவ்வாறு கூறுவது சத்திய சுரூபியாகிய சருவேசுரனை, முகத்தாட்சணியம் பாராத முழுமுதல்கடவுளையே பழிப்பதாகும்.

---

# ஐந்து ஏவாயுதங்கள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி.)

தனிப்பட்ட முறைகளில் ஏற்படக்கூடிய மனஸ்தாபங்களினால் குருவர்க்கத்தில் பக்திகுறைந்து, அதனால் தேவ நேசத்தை நெகிழவிடுவது ஆன்ம தற்கொலையாகும். உமது ஆன்ம ஈடேற்ற விஷயத்தில் உமது உயிரைத்தானும் இழக்கினும் ஏனைய விருப்புவெறுப்புகள் குறுக்கிடவிடாது காத்துக்கொள்வீராக.

## 5-வது: செபக் குறைவு

நீர் தேவனை முழு இருதயத்தோடும் நேசியாதிருப்பின் உமது செபக்குறைவினால் போதியளவு வரப்பிரசாதம் பெறாதிருப்பதும் காரணமாய் இருக்கலாம்.

உமது வேத அனுசரணையும் ஒழுக்க முறைகளும் குறைபாடின்றி இருப்பினும் தேவ நேசத்தைப் பெறுதற்கு வேண்டிய அவரது வரப்பிரசாதத்தைப் பெற நீர் முறையாகச் செபிக்கவில்லைப்போலும்!

தேவ நேசத்தைப் பெறுவதற்கு நாம் முறையாகச் செபித்தல் இன்றியமையாதது. "கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்" என்னும் தேவ வார்த்தைகள் என்றும் உமது செவிகளிலே தொனிக்கக் கடவதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org